We Excel In Bridal Dressing For Hindu & Christian Weddings
YOGI Beauty Parlour
71, Nayanmar Veethy, Kachcheri Nallur Road, Nallur, Jaffna.

பக்கங்கள் ஆறு
Registered as a Newspaper
# உதயன்
விலை ரூபா 5-00

இந்து, கிறிஸ்தவ மணப் பெண்களை நவீன முறையில் அலங்காரம் செய்யவும்
Facial Bleaching, Eyebrow Shaping, Waxing and Hair Cuts செய்து கொள்ளவும்
YOGI BEAUTY PARLOUR (ONLY LADIES)
71, நாயன்மார் வீதி, நல்லூர்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 10 ஞாயிற்றுக்கிழமை (25 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 29

# கண்ணியில் சிக்கி 5 சிப்பாய்கள் பலி!

## இருபது பேர் வரை படுகாயம்

கொழும்பு, டிசம்பர் 25

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுப் பிற்பகல் விடுதலைப் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றில் ஸ்ரீலங்கா படைச் சிப்பாய்கள் ஐவர் கொல்லப்பட்டனர். மேலும் இருபதுக்கும் அதிகமானோர் படுகாயமுற்றனர்.

ஸ்ரீலங்கா படைகளின் செயற்பாட்டுத் தலைமையக பிரதம நிர்வாக அதிகாரி பிரிகேடியர் நிஹால் ஜெயக்கொடி கொழும்பில் இத்தகவலை வெளியிட்டார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிக்கும் பனிச்சங்கேணிக்கும் இடையில் இராணுவத்தினரை ஏற்றிச்சென்ற பஸ்ஸின் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து மேலதிக தகவல்கள் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை.

# அர்ஜுன் சிங் ராஜினாமா!

# காங்கிரஸில் நெருக்கடி!!

புதுடில்லி, டிச. 25

இந்தியாவின் ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சருமான அர்ஜுன் சிங் தமது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்திருப்பதை அடுத்து—

பிரதமர் ராவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் அரசு மிகவும் நெருக்கடியை எதிர்நோக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

பிரதமர் ராவின் சிபாரிசுக்கு அமைய அர்ஜுன் சிங்கின் இராஜினாமாவை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

ஏழு பக்க இராஜினாமாக் கடிதத்தை பிரதமர் ராவுக்கு அனுப்பி வைத்த அர்ஜுன் சிங் அந்தக் கடிதத்தில் பிரதமர் ராவுக்கு எதிராக கடுமையாக கண்டனக் கணைகளை தொடுத்துள்ளார்.

அரசினதும் கட்சியினதும் நம்பகத் தன்மையைக் காப்பாற்றுவதற்கு அவசர நடவடிக்கை எடுக்கும்படி அவர் கட்சித் தலைவரும் பிரதமருமான ராவை இக்கடிதத்தில் கேட்டுள்ளார்.

தமது இராஜினாமா குறித்து அறிவிப்பதற்காக நேற்று நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் — திரண்டிருந்த செய்தியாளர் மத்தியில் உரையாற்றிய அவர், கட்சி செயற்குழு உறுப்பினராக

[5 ஆம் பக்கம் பார்க்க]

## ராஜீவ் கொலை குறித்தும் அர்ஜுன் சிங் சந்தேகம்

புதுடில்லி, டிச. 25

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பான சம்பவங்களை மூடி மறைப்பதற்குப் பகிரதப் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அர்ஜுன் சிங் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பிரதமர் ராவுக்கு அனுப்பிய இராஜினாமாக் கடிதத்திலேயே அவர் இவ்வாறு குற்றம் சாட்டியிருக்கிறார்.

ராஜீவ் கொலை தொடர்பான சூழ்நிலைகள் குறித்து விசாரணை நடத்திய வர்மா கமிஷனின் அவதானிப்புகள் சம்பந்தமாக தொடர் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

(உ-ஐ-4)

## ஆண்டின் நாயகராக பாப்பரசர்



கொழும்பு, டிச. 25

உலகப் புகழ் பெற்ற அமெரிக்க சஞ்சிகையான 'டைம்' இவ்வாண்டின் நாயகராக புனித பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரைத் தெரிவு செய்திருக்கிறது.

''இவ்வாண்டின் நாயகர்'' எனத்தெரிவித்து பாப்பரசரின் மார்பளவு படத்துடன் கூடிய அட்டையுடன் ''டைம்'' சஞ்சிகையின் இதழ் விற்பனைக்கு வந்துள்ளது. (உ)

## மட்டக்களப்பு மக்கள் வெடி கொளுத்தத் தடை

### படையினர் ஒலிபெருக்கியில் அறிவிப்பு

கொழும்பு, டிச. 25

தற்போதைய பண்டிகைக் காலத்தில் வாண வெடிகளையோ, சீனவெடிகளையோ வெடிக்கவைக்க வேண்டாம் என மட்டக்களப்பு மக்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

இது பற்றிய அறிவித்தலை படையினர் ஒலிபெருக்கி மூலம் மட்டு நகரில் அறிவித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சீனவெடிகளை விற்பனை செய்வோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு நகரில் கேட்ட வெடிச்சத்தங்களினால் அவை துப்பாக்கி வெடிச்சத்தமா அல்லது சீனவெடிச் சத்தமா என்று தெரியாமல் — படையினர் திகிலடைந்து காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## ரூபவாஹினியில் சந்திரிகா அடிக்கடி தோன்றுவார்!

கொழும்பு, டிச 25

சமகால நடப்புகளை மக்களுக்குத் தெரிவிப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனிமேல் அடிக்கடி ரூபவாஹினியில் தோன்றுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த செவ்வாயும் புதனும் அவர் ரூபவாஹினியில் [illegible] (உ)

## மது போதையில் பௌத்த பிக்கு ரகளை!

கொழும்பு, டிச. 25

கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு முன்னால் மது போதையில் நடமாடி, யாத்திரிகர்களுக்கு தொந்தரவு கொடுத்ததாகக் கூறப்படும் பிக்கு ஒருவர் தண்டிக்கப்பட்டார்.

பொலிஸார் அந்த பிக்குவை கைது செய்து கண்டி நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்த சமயம் அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அந்த பிக்குவுக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் அபராதம் விதித்த நீதிவான் அவரை எச்சரிக்கை செய்து விடுவித்தார்.

## நத்தார் நல்வாழ்த்துகள்



வாசகர்கள், விளம்பரதாரர்கள், செய்தியாளர்கள், எழுத்தாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் உதயனின் நத்தார் நல்வாழ்த்துக்கள் உரியனவாகுக!

# சமாதானம் வேண்டி ஆராதனை நடத்துங்கள்!

## அதிமேற்றிராணியார் கோரிக்கை

கொழும்பு, டிச. 25

தொடர்ந்து யுத்தம் இடம்பெற்றுவரும் வடக்கு— கிழக்கில் சமாதானம் ஏற்பட வேண்டி இந்த நத்தார் தினத்தன்று விசேட ஆராதனைகளை நடத்துங்கள்.

—இவ்வாறு கத்தோலிக்க மக்களிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார் கொழும்பு அதிமேற்றிராணியார் வண. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ.

நத்தார் தினத்தை ஒட்டி வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கோரியிருக்கிறார்.

சமாதானத்தின் அவசியம் குறித்து மக்களின் எதிர்பார்ப்பு முன்னெப்போதையும் விட இப்போது அதிகரித்து காணப்படுகின்றது.

சமாதானத்துக்கான தமது விருப்பத்தை — நல்லெண்ணத்தை — மக்கள் கடந்த பொதுத் தேர்தலிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர்.

அரசு வெளியிட்டுள்ள சமாதான முயற்சிகளுக்கு வடபகுதியில் நல்லவரவேற்பு கிடைத்துள்ளமை சந்தோசத்தைத் தருகின்றது.

அரசியல் செயற்பாட்டில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பொலீஸ் அதிகாரிகள் 300 பேருக்கு கல்தா!

கொழும்பு, டிச. 25

சுமார் 12 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் (எஸ் பி. மார்) உட்பட 300 பொலீஸ் அதிகாரிகள் இன்னும் ஐந்து நாள்களில் — டிசம்பர் 31 ஆம் திகதியுடன் — வீட்டுக்கு அனுப்பப்படவிருக்கின்றனர்.

பொலீஸ் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் முன்னைய ஐ.தே.க. அரசினால் றிசேர்வ் பொலீஸ் சேவையில் அமர்த்தப்பட்ட அதிகாரிகளே இம்மாத முடிவுடன் வேலையிழக்கவிருக்கின்றனர்.

இது தொடர்பான உத்தரவை பொலீஸ் தலைமையகத்துக்கு அரசு விடுக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக ''த ஐலண்ட்'' நாளிதழ் தகவல் வெளியிட்டிருக்கிறது.

அரச சேவையில் ஓய்வு பெற்ற பின்னரும் சேவை நீடிப்பு வழங்கப்பட்ட அனைவரையும் சேவையிலிருந்து விலக்குவது என புதிய அரசு எடுத்திருக்கும் கொள்கை முடிவின்படி கடந்த செப்டம்பரில் டி.ஐ.ஜிமார் ஆறு பேர் வேலையிழந்தது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், மேலும் பத்து டி.ஐ.ஜிக்கள் அடுத்த வருடம் சேவையை விட்டு விலகவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளனர். (உ)

# கொழும்பு நகரில் தீவிர பாதுகாப்பு!

கொழும்பு, டிச. 25

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவரும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஊழியர்கள் மற்றும் விடுதி வசதி கோரி போராட்டம் நடத்தி வரும் கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் திடீரென வழிமறிப்புப் போராட்டங்களை நடத்தி தலைநகர் கொழும்பை செயல் இழக்கச் செய்யலாம் என்ற அச்சத்தில் தலைநகரில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.

பண்டிகைக் காலத்தில் வழிமறிப்பு மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி தலைநகரில் வழமையான நடவடிக்கைகளைச் செயல் இழக்கச் செய்ய முயற்சி நடக்கலாம் என பொலீஸார் சந்தேகிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## இரவு நத்தார் ஆராதனை

யாழ்ப்பாணம், டிச. 25

உலகெங்கும் உள்ள கிறிஸ்தவ மக்கள் நேற்று நள்ளிரவில் நடந்த நத்தார் ஆராதனைகளில் கலந்து கொண்டனர்.

குடாநாட்டில் உள்ள தேவாலயங்களிலும் நேற்று நள்ளிரவு முதல் நத்தார் ஆராதனைகள் ஆரம்பமாகின. பெரும் எண்ணிக்கையான கிறிஸ்தவ மக்கள் தேவாலயங்களில் கூடியிருந்தனர். [ஐ]

## கொக்குத்தொடுவாயில் புலிகள் தாக்குதல்!

கொழும்பு, டிச. 25

கடந்த புதன் இரவு முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலில் மூன்று சிப்பாய்கள் காயமுற்றனர்.

கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் ஒருவார காலத்தில் இடம்பெற்ற இரண்டாவது தாக்குதல் சம்பவம் இதுவாகும்.

செயற்பாட்டுத் தலைமையகத்தின் பிரதம நிர்வாக அதிகாரியாக கடந்த வியாழனன்று பொறுப்பேற்ற பிரிகேடியர் நிஹால் ஜெயக்கொடி இத்தகவலை வெளியிட்டார். (உ)

### வொய்ஸ் ஒவ் அமெரிக்கா விவகாரம்:

## அமெரிக்க - ஸ்ரீலங்கா ஒப்பந்தம் மறுபரிசீலனை

புத்தளம் மாவட்டம் இரணவில பகுதியில் அமெரிக்க வானொலி அஞ்சல் நிலையம் அமைப்பது தொடர்பாக அமெரிக்காவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்வது என ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்திருப்பதாக அதிகார பூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' நிலையம் அமைக்கப்படுவதற்கு அப்பகுதி கத்தோலிக்க மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ-6)

### பாப்பரசரை தரிசிக்கச் செல்வதற்கு

## பாதை வசதியை ஆராய கொழும்பில் மாநாடு

பரிசுத்த பாப்பரசரை தரிசிப்பதற்காக கொழும்பு செல்லவுள்ள யாழ். குடாநாட்டு கத்தோலிக்க மக்களுக்கு அதற்கான பாதை வசதி செய்வது குறித்து கொழும்பில் ஆராயப்பட உள்ளது.

இது சம்பந்தமான மாநாடு ஜனவரி 8 ஆம் திகதி அங்கு நடைபெறும்.

பூநகரி அல்லது ஆனையிறவுப் பாதையைத் திறப்பது சம்பந்தமாக இந்த மாநாட்டில் ஆராயப்படும் என்றும்—

அதற்கான சாத்தியம் இல்லாவிடில், கிளாலி ஊடாகச் செல்லும் யாத்திரிகர்கள் தாண்டிக்குளம் முகாமை தடை ஏதுமின்றிக் கடக்க வசதி செய்வது குறித்து ஆராயப்படும் என்றும்— தெரிய வந்தது.

இதேவேளை—

தாண்டிக்குளம் முகாமில் யாத்திரிகர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது அந்த முகாமுக்கு அணித்தாக பஸ்களில் சென்று இறங்குவதற்கு அனுமதிப்பது, வவுனியாவுக்கு எவ்வித தடையுமின்றிச் செல்ல அனுமதிப்பது ஆகியன குறித்து அரச மற்றும் பாதுகாப்பு வட்டாரங்களில் இப்போது ஆராயப்பட்டு வருவதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-4)

## மக்களின் நம்பிக்கை பேண சந்திரிகா தவறிவிட்டார்!

### விக்டர் ஐவன் கருத்து

பதவியில மாபெரும் வெற்றியீட்டிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தம்மை ஜனாதிபதியாக்கிய மக்களின் நம்பிக்கையை பேணத் தவறிவிட்டார். மக்கள் மத்தியில் பதற்ற நிலைமையே உருவாகி வருகிறது.

''ராவய'' ஆசிரியரும் அரசியல் விமர்சகருமான விக்டர் ஐவன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரச தனியார் துறைகளில் ஏற்பட்டுவரும் தொழிலாளர் பிணக்குகள் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளன.

ஊழல்களுக்கு எதிரான அரசின் நடவடிக்கைகளிலும் பின்னடைவு காணப்படுறது.

நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளில் மிக முக்கியமானது எனக் கருதப்படும் இனப் பிரச்சினை குறித்துக் கூட உறுதியாகச் செயற்படும் ஆற்றல் அரசுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

மக்களின் அபிலாஷைகளுக்கும் அரசின் ஆற்றல்களுக்கும் இடையே நீண்ட இடைவெளி தெரிகிறது. — இவ்வாறு விக்டர் ஐவன் மேலும் தெரிவித்தார். (ஐ-6)

## எழுதுவினைஞர் தரத்துக்கு விரைவில் போட்டி பரீட்சை!

### 2 ஆயிரத்து 500 பேருக்கு நியமனம்

கொழும்பு, டிச. 25

போட்டிப் பரீட்சை மூலம் எழுதுவினைஞர் மற்றும் அதனோடு இணைந்த சேவைகளுக்கு 2 ஆயிரத்து 500 பேரைச் சேர்த்துக் கொள்வதற்கு பொது நிர்வாக அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத் தாபனங்களில் இவர்கள் நியமிக்கப்படுவர்.

டிசம்பர் 30ஆம் திகதி, ஜனவரி 6 ஆம் திகதி வர்த்தமானிகளில் இது தொடர்பான விவரங்கள் வெளியிடப்படவுள்ளன.

இந்தப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க ஆகக் குறைந்தது ஜீ.சீ.ஈ. சாதாரணதரத்தில் கணிதம், மொழி ஆகிய பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும் என்று பொதுநிர்வாக அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எழுதுவினைஞர் தரத்திற்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மகாலக்சுமி திருக்குறள் நாட் கலண்டர்கள் விற்பனையாகின்றன. விலை 65/-. மாதப்படக் கலண்டர்கள் விலை 14/-. வியாபாரிகள் தங்கள் விலாசமிட்டுப் பதிப்பித்து கொள்ளலாம். விசேஷ கழிவுண்டு. மகாலக்சுமி அச்சகம், 127, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (8096)

கிறிஸ்மஸ் சோடனை, அழகுசாதனப் பொருள்கள் பிளாஸ்ரிக் பொருள்கள், பொலித்தீன் வகைகள் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: ஜெயா அழகுமாடம், இல. 187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-9838)

இரண்டு மாதம் நிரம்பிய மணித்தாராக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 71, அம்பலவாணர் வீதி, அத்தியடி. [34294]

பாவித்த Sony - FM/MW/SW பொக்கற் றேடியோ மொடல் ICF - 400S உடன் விற்பனைக்குண்டு; தொடர்பு இல. 766, காங்கேசன்துறை வீதி, தட்டாதெருச் சந்தி. (34312)

நாவற்குழிக் கோயிற்பற்று கைதடி இறை "இலங்கையன் பிட்டியும்" "நடைக் குளிக் காடும்" நெற்பரப்பு 16, கைதடி தபால் கந்தோருக்கு கிட்டுதலாக விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. விரும்புவோர் சி. ஜெயராசா, இல. 94, ஐயனார் கோயில்வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தில் சந்திக்கவும். (34278)

1995ஆம் ஆண்டுக்குரிய நாட்குறிப்பேடுகள் (டயறி) மலிவுவிலையில் விற்பனைக்குண்டு. தொகைக்கு எடுப்பின் கழிவு வழங்கப்படும். ரஞ்சித் இல. 16 (44), மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (34306)

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler இறைச்சிக்கோழிகள் நாள்தோறும் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (34328)

### மணமகள் தேவை

இந்து, அவிட்டம், யாழ் நகரில் அரச வங்கியில் பணிபுரியும் உத்தியோகத்தருக்கு படித்த, பண்புள்ள மணமகள் தேவை. உத்தியோகம் புரியாதவரும் விண்ணப்பிக்கலாம். முழுவிவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல. 740, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [34345]

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 31 வயது மகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். யாழ். B.Sc. Second Class Honours அவுஸ்திரேலியாவில் Business Management & Accountancy பயின்று உத்தியோகமும், நிரந்தர வதிவிடமும் உடையவர், திருவோணம், செவ்வாய் தோஷமில்லை Fair 5' 7'' பட்டதாரிகள் விரும்பத்தக்கது. சாதகத்துடன் தொடர்பு: இல. 727, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (34052)

### காணி விற்பனை

கொடிகாமம், கச்சாய் வீதி, கிராமசபை அலுவலகத்திற்கு முன்பாக ஏழு பரப்புத் தென்னங்காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: அருணன் கமலாதேவி, கச்சாய் வீதி, கொடிகாமம். (34344)

### அனெக்ஸ் தேவை

மூவர் மட்டும் உள்ள குடும்பத்திற்கு யாழ். மாநகர எல்லைக்குள் அனெக்ஸ் அல்லது வீடு வாடகைக்கு தேவை. நல்லூர், திருநெல்வேலி, கந்தர்மடம் பகுதிகள் விரும்பத்தக்கது. இல. 739, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (34343)

### தாதி பயிலுநர் தேவை

தாதி பயிலுநர் தேவை. தொடர்பு: லிங்கம் சிகிச்சை நிலையம், குளப்பிட்டி, ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். நேரம் காலை 6-00—8-00, மாலை 3-00—6-00. [34346]

### தவறிவிட்டது

16-12-94 அன்று கா. சுந்தரலிங்கம் (ஏழாலை கண்ணகை அம்மன் பூசகர்) ஆகிய எனது குடும்ப நிவாரண முத்திரை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி கோயிலில் ஒப்படைக்கவும். கா. சுந்தரலிங்கம். (சி-50)

### புத்தகங்கள்

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் Bright இன் புத்தகங்கள் கணிதம் ரூபா 60/- தமிழ் 50/- 20 மாதிரி வினாத்தாள்கள் 80/- இலகு முன்னோடிப் பயிற்சிகள் 80/. பூபாலசிங்கம் மற்றும் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். (34302)

### பஞ்சாங்கம்

ஜோஸ்யர் பஞ்சாங்கம். ஜோஸ்யரின் புத்தாண்டு வெளியீடு முப்பதாம் திகதி கிடைக்கும். வருடம் முழுவதும் தேவையான பஞ்சாங்கத்தை வாங்கி எமக்கும் ஒரு வரி எழுதுங்கள். (34315)

**விக்னா**
**கல்வி நிறுவனம்**
**94 பரீட்சை எடுத்தவர்களுக்கான மீட்டல்**

தமிழ்: திரு. குழந்தை
திங்கள், வெள்ளி
மாலை (4-30 — 6-00)

ஆரம்பம்:
**26 - 12 - 94**

புவியியல்—
திரு. குணராஜா
சனி, ஞாயிறு
மாலை (3-00 — 5-00)
ஆரம்பம்:
**31 - 12 - 94**

(சி-53)

### வாடகைக்குத் தேவை

திருநெல்வேலி, நல்லூர், வண்ணார்பண்ணை சுற்றாடலில் வீடு அல்லது 'அனெக்ஸ்' வாடகைக்குத்தேவை. உடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும் இல. 738, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (34318)

### வாடகைக்கு

நல்லூரில் Flat கூரை, சுருக்கு கதவுடன் கூடிய இரு கடைகள் வாடகைக்கு உண்டு. கூட்டாக வியாபாரம் செய்ய விரும்பும் பங்காளிகளும் விரும்பப்படுவர். தொடர்பு: இல. 123, பருத்தித்துறை வீதி, நல்லூர். (இந்து விடுதிக்கு முன்பாக) (34317)

### A/L இரசாயனம்

A/L இரசாயனம் Day Class ஆரம்பம்: 26-12-94 காலை 8-00 மணி ஆசிரியர் சத்தீஸ், இல. 108, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [34335]

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

ஒரு சிறிய மோதிரம் எங்கள் கடைக்குள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். ராசி பட்டுச்சோலை, ராசி சில்க்ஸ், 70, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (சி/37)

### இலவசம்

இயேசு கிறிஸ்துவைப்பற்றி அறிய விரும்பினால் அதற்குரிய புத்தகங்கள் அனுப்பி வைக்கப்படும். நேரடியாக அல்லது முத்திரை ஒட்டிய சுயவிலாசம் எழுதிய உறையுடன் தொடர்பு கொள்ளவும்: சுவிசேஷகர் செ. துரைசிங்கம், இல. 64, புவனேஸ்வரி வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். (34341)

### மணிக்கூடு திருத்தல்

சகலவித மணிக்கூடுகளையும் மற்றும் றேடியோக்கள், ரி. வி. டெக்குகளை பழுது பார்த்துக் கொள்ள பல்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (சி-9912)

### சிவம்ஸ் கலண்டர்

இரகுநாதையர் பஞ்சாங்கப்படி கணித்து வெளிவந்துள்ளது சிவம் கலண்டர். விலை குறைக்கப்பட்டுள்ளது. மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனையாகின்றது. அப்பியாசக் கொப்பிகள் தாராளமாகக் கிடைக்கும். மக்மிலன் புத்தகசாலை, ஸ்ரீ காந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-47)

### A/L பௌதிகவியல்

தனிப்பட்ட முறையில் ஏராளமான பயிற்சிகளோடு பௌதிகவியல், தூயகணிதம், பிரயோககணிதம் 95/96 பல வருட அனுபவம் பெற்ற ஆசிரியரினால் சிறப்பாகக் கற்பிக்கப்படும். R. பாலசுப்பிரமணியம் B. Sc. (Cey) Dip-in-Ed, 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (8100)

### கலண்டர்கள்

பொக்கற் கலண்டர்கள் சகல விதமான தினத்தாள் கலண்டர்கள் அன்பளிப்பு அடிக்கும் கலண்டர்கள் பெரிய, சிறிய சிலிப் தனியாக மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். காந்தி அறிவகம், இல. 330, காங்கேசன் துறைசாலை, யாழ்ப்பாணம். (34304)

### அப்பியாசக் கொப்பி

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்களும் மலிவு விலையில் வியோகிக்கப்படுகின்றன. நேர அட்டவணை, கலண்டர்களும் இலவசம். அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-9936)

★ எமது அன்பர்கள்
★ ஆதரவாளர்கள்
★ வாடிக்கையாளர்கள்
— ஆகியோருக்கு —
எமது அன்பான உள்ளம் கனிந்த
**நத்தார், புதுவருட**
★ **நல் வாழ்த்துக்களை** ★
**ஹோட்டல் ஞானம்ஸ்**
ஸ்தாபனத்தாரும் ஊழியர்களும்
தெரிவித்துக் கொள்கின்றார்கள்

எம்மிடம்
- ★ உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகள் தங்குவதற்கு பல வசதிகள் நிறைந்த அறைகள்
- ★ குளிர்பானங்கள்
- ★ குளிரூட்டப்பட்ட பியர், ஸ்ரவுட் வகைகள்
- ★ மது பானங்கள்
- ★ சுவையான தரமான உணவு வகைகள்
- ★ உணவுப் பார்சல்கள் (Burriyani, Fried Rice, Noodle Etc.) முன்கூட்டியே ஓடர்களுக்கு வழங்கப்படும்
- ★ திருமண, பிரியாவிடை மற்றும் மங்கள விருந்துபசாரங்கள் செய்வதற்கான மண்டப வசதி
- ★ எதுவானாலும் உங்கள் விருப்பத்தை உங்கள் திருப்திக்கேற்ப பூர்த்தி செய்ய விரையுங்கள்

## ஹோட்டல் ஞானம்ஸ்

299, மணிக்கூட்டு வீதி,
(இளங்கோ தெரு)
யாழ்ப்பாணம்.

[சி-52]

# தமிழ்த்தாய் நாட்காட்டி

## நாளை தான் வெளிவருகிறது!

### நினைவில் வைத்திருங்கள்

உங்கள் சுவரில் தொங்குவது நாட்காட்டி அல்ல........
உன்னத நூல்நிலையமொன்றுதான்




எங்கேயும், எப்போதும்
இன்று
இதே பேச்சுத்தான்

சரி; அப்படி என்ன புதுமை?

அன்றாடம் விரியும் அறிவுக்களஞ்சியம்
நித்தம், நித்தம் தரும் தகவல்கள்

## தமிழ்த்தாய் நாட்காட்டி இருக்கும் வீட்டில் பஞ்சாங்கம் வேண்டியதில்லை.....

நாளை! தமிழ்த்தாய் நாட்காட்டி விலை 100/-

- இது தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவின் வெளியீடு.

(சி-10092)

உ

நலன் பெற

## ஆசி வேண்டுகின்றோம்

யாழ். மாவட்ட நீதிபதியும்,
சமய, சமூகத் தொண்டரும், வல்வை கான மன்றத்தின் தலைவருமான

**திரு. ந. யோகசிகாமணி**

அவர்களுக்கு

இன்று (25-12-94) சென்னைநகர் 'அப்பலோ' வைத்தியசாலையில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை நடைபெற இருப்பதால்,

அன்னார் விரைவில் பூரண நலன்பெற்று, மேலும் பல தொண்டுகளை மக்களுக்கு ஆற்ற வேண்டும் எனவும், எமது தமிழ்ஈழ மாதாவை வேண்டி நிற்கின்றோம்.

நீடுழி வாழ்க!

வல்வை மக்கள்,
வல்வை கான மன்றம்,
வல்வை சிதம்பராக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.

பொலிகண்டி கந்தவன சுப்பிரமணியர் தேவஸ்தான
இராஜகோபுர திருப்பணிச் சபை.

(34351)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் நத்தார் சிறப்பு மலர்



## மனுமகன் பிறப்பு நாளின் சிறப்புத் தகவல்கள்

மனுக்குலத்தை மீட்க வந்த இறைமகன் இயேசுவின் பிறப்பு நாளினை உலகம் மகிழ்வோடு கொண்டாடிக் கொண்டிருக்கும் இன்றைய நாளில் ஒருவருக்கொருவர் கைகுலுக்கி வாழ்த்துக்கள் கூறி நாட்டினை, அன்பினை வெளிப்படுத்தி நிற்கும் உங்கள் உள்ளத்தில் அவரின் பிறப்பு நாளின் சிறப்புத் தகவல்கள் சில இதோ;

★ கிறிஸ்மஸ் என்பதை 'X' MAS என்றும் சுருக்கி எழுதுகிறார்கள் அல்லவா? கிறிஸ்துவின் பெயரின்முதல் எழுத்தான CHI என்பதை கிரேக்க மொழியில் 'X' என்று எழுதினார்கள். அதிலிருந்துதான் இந்த 'X'MAS என்பது உருவானது.

★ நத்தார் தினத்தை இத்தாலி நாட்டில் 'டால்லே' என்றும், பிரான்ஸ் நாட்டில் 'நோயல்' எனறும், ஸ்கொட்லாந்தில் 'யூல்' என்றும், ஸ்பெயினில் 'நேவிட்ட' என்றும். இதர மேலை நாடுகளில் 'பீஸ்ற் ஒப் லைற்' என்றும் அழைக்கிறார்கள்.

★ இயேசு நாதர் பிறந்த பெத்லகேமில் ஏராளமான தேவாலயங்கள் இருப்பினும், மிகவும் புகழ்பெற்றது 'சேர்ச் ஒப் நேட்டி விட்டி' என்ற ஆலயமே. இது இறைமகன் பிறந்த மாட்டுத் தொழுவத்தின் மீது கட்டப்பட்டதாகும்.

★ 'கிறிஸ்மஸ் தீவு' இப்படியொரு பெயர் கொண்ட தீவு. அவுஸ்ரேலியாவுக்கு அருகில் உள்ள இந்திய பெருங்கடலில் உள்ளது. 'ரிச்சார்ட் ரோவ்' என்பவர் 1615இல் இந்த புதிய தீவைக் கண்டுபிடித்தார் கண்டுபிடித்த தினம், கிறிஸ்மஸ் தினம் என்பதால் அதற்கு 'கிறிஸ்மஸ் தீவு' என்றே பெயர் சூட்டி விட்டார். இத்தீவு வெளியிடும் தபால் தலைகளில் 'CHRISTMAS ISLAND' என்று இருப்பதைக் காணலாம்.

★ 'கிறிஸ்மஸ்' என்றால் என்ன கருத்து? கிறிஸ்து என்ற இறைமகனின் பெயரையும் 'மாஸ்' ஆலயத் திருப்பலியைக் குறிக்கும் பெயரையும் இணைத்தே இப் பெயர் உருவானது.

★ முதன் முதலில் 'கிறிஸ்மஸ் குடில்' அமைக்கும் வழக்கத்தை 1223ஆம் ஆண்டில் புனித பிரான்சிஸ் அசிசியார் தான் அறிமுகப்படுத்தினார். அன்றிலிருந்துதான் கிறிஸ்மஸ் விழாவில் 'கிறிஸ்மஸ் குடில்' அமைக்கும் முறை நடைமுறைக்கு வந்தது.

★ உலகப் புகழ் பெற்ற கிறிஸ்மஸ் கீதமான SILENT NIGHT' (அமைதி இரவு) என்ற பாடல் முதன் முதலாக 1818ஆம் ஆண்டில் ஒஸ்ரியா நாட்டின் குருவான வண. ஜோசப் மோஹர் என்பவரால் எழுதப்பட்டது. அன்று முதல் இன்று வரை அகில உலகிலும் இது ஒலிக்கிறது.

★ கிறிஸ்மஸ் நாட்களில் கிறிஸ்தவர்களின் இல்லங்களில் கண்ணைக் கவரும் படியாக காட்சி தரும் 'நட்சத்திரக் கூடுகளை' முதன் முதலில் அறிமுகப்படுத்திய நாடு சுவிடன் ஆகும்.

★ 'கிறிஸ்மஸ் மரம்' அலங்கரிக்கும் நடைமுறை பத்தாம் நூற்றாண்டிலிருந்து இருந்து வருகிறது. தற்போது போன்று அலங்கரிக்கும் முறையை உருவாக்கியவர் அமெரிக்காவைச் சேர்ந்த 'அல்பிரட் கூக்கா' என்பவர் ஆவார்.

★ 'கிறிஸ்மஸ் மரம்' வைக்கும் பழக்கம் முதன் முதலில் 1605இல் ஜேர்மனியின் 'ஸ்டிரான்பர்க்' நகரில் நடந்த கிறிஸ்மஸ் விழாவின் போது தான் நடைமுறைக்கு வந்தது.

★ 'கிறிஸ்மஸ் குடில்' களில் தொங்க விடப்படும் நட்சத்திரங்கள் எதனைக் குறிக்கின்றன தெரியுமா? இயேசுவின் பிறப்பின் போது, அவரைத் தரிசிக்கச் சென்ற ஞானிகளுக்கு வழிகாட்டியாக அமைந்த விண் மீனைத்தான்.

★ உலகின் முதல் 'கிறிஸ்மஸ் வாழ்த்து' அட்டையானது 1843இல் ஆகும். இங்கிலாந்தைச் சேர்ந்த 'ஹென்றி கோல்' என்பவரால் தயாரிக்கப்பட்டது. இதில் இன்னொரு

(4ஆம் பக்கம் பார்க்க)


✶ வாடிக்கையாளர்கள்
✶ அன்பர்கள்
✶ நண்பர்கள்
அனைவருக்கும்
எமது கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்
உரித்தாகுக!
ஜெயா அழகுமாடம்
(மொத்த உதிரி விற்பனை நிலையங்கள்)
187, 177A மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-41]


## நீதியுடன் அமைந்த சமாதானம் விளைய உறுதியுடன் உழைப்போம்

என்றுமில்லாத விதமாக முழுஉலகும் அமைதிக்காக ஏங்குகின்றது. ஆனால் அமைதியோ மனித வர்க்கத்தைவிட்டு வெகு தொலைவில் உள்ளதாகவே தென்படுகிறது.

இவ்வேளையில் மீண்டும் கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் நத்தார் விழா உலகமெங்கும் அனுசரிக்கப்படுகிறது.

அமைதியின் இளவரசன் என்றழைக்கப்படும் யேசுகிறிஸ்துவின் பிறப்பு எக்காலத்திலும் மனித உள்ளங்களுக்கு ஒரு நம்பிக்கைக் கீற்றாகும்.

நீண்டகாலமாக உரிமைகள் இழந்து பேரிழப்புகள் மத்தியில் துன்புறும் தமிழ் பேசும் மக்கள் எப்போது அமைதிவரும் என்று ஏங்குகின்றனர்.

நாட்டின் தலைவர்கள் போர் முறைகளிலும் அடக்கு முறைகளிலும் நம்பிக்கை வைக்காது பரஸ்பர உறவுடன் பேச்சுவார்த்தை மூலம் நீதியுடன் அமைந்த சமாதானத்தை விளைவிக்க மனஉறுதியுடன் உழைக்க வேண்டுகின்றேன்.

யேசுபாலனின் பிறப்பைக் கொண்டாடும் இந்த இனிய நத்தார் காலத்தில் உதயன் வாசகர்கள், உதயன் நிறுவனத்தினர் உட்பட அனைத்து மக்களுக்கும் நத்தார்— புதுவருட வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வண. தோமஸ் சௌந்தரநாயகம்
யாழ். ஆயர் கத்தோலிக்க திருச்சபை

## தெய்வீக பாலனுக்கு நாம் அளிக்கும் பரிசு மற்றவர்களை மகிழ்வூட்டுவதே

அன்பின் தெய்வம் பூவுலகில் நடமாட வந்ததனைக் குறிக்கும் தினம் கிறிஸ்மஸ் ஆகும். பல்லாண்டு காலமாக அடிமைத் தளையிற் சிக்கி, நோயின் இருப்பிடமாய் வறுமையின் கோரக் காட்சியாய் வாழ்ந்த இஸ்ரவேல் மக்கள் தமக்கு வாழ்வளிக்கும் வள்ளலை ஆவலோடு காத்திருந்தனர்.

இயேசுபிரான் ஓர் ஏழை மாட்டுத் தொழுவத்திலே, இடையர்களும் தொழிலாளிகளும் கண்டு களிக்கும் வண்ணந் தோன்றினார். வேதனைப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளித்தார் இயேசு நடைப்பிணங்களாகவும் ஏமாளிகளாகவும் வாயில்லா பூச்சிகளாகவும் வாழ்ந்த மக்களுக்கு மெய்யான வாழ்வை அருளினார்.

மக்களிற் சிலர் முயல்போல எப்பொழுதும் பயந்து போய் இருந்தார்கள். இன்னும் சிலர் பண முதலைகளாகவும் பேராசைக்காரராகவும், இருந்தனர். இனுஞ் சிலர் தாமுண்டு தங் குடும்பம் உண்டு என்று அயலவரைப்பற்றிச் சிந்தியாது வாழ்ந்தனர்.

இவை போலி வாழ்க்கை யென்றார் இயேசு. போலி வாழ்க்கை நடைபிணம் போன்றது. நடுக்காட்டில் நச்சுமரம் போன்றது. போலிவாழ்வை விடுத்து மெய்வாழ்வுக்கு வாருங்கள் என்றார். போலி வாழ்க்கை மெய் வாழ்வாக வேண்டுமெனின் இறைவனைப் பற்றி அறிவு அவசியம். இறையுணர்வு கிட்ட மனிதன் ,மரணம் என்ற நிலையைக் கடந்து விடுகின்றான்.

மரணமில்லாப் பெருவாழ்வு வேதனையில் சாந்தியையும் துன்பத்தில் ஆறுதலையும், சோதனையில் பொறுமையையும்தருவது. மனிதன் அச்சத்தையும் அகங்காரத்தையும், அவாவையும் நீக்கி இன்பமாக வாழ வழிவகுப்பது.

மெய்யான வாழ்வை நல்க இறைவன் நம்மைத் தேடி வந்தார். இந்த மகிழ்ச்சிகரமான காலத்திலே, எமது சந்தோஷத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது மிகவும் அவசியம்

இன்று நமது நாட்டிலே லட்சோபலட்சம் மக்கள் அகதிமுகாம்களிலே வசித்துவருகின்றனர். செல்லடிக்கும், குண்டுவீச்சுக்கும் இலக்காக மாய்கின்றனர்.

ஏழைக்குடிசைகளுக்குச் சென்று சமாதானப் பிரபுவின் வருகையைக் கூறி மகிழ்ச்சி கொண்டாடுவோம். நம்மிடம் உள்ளவற்றை அவர்களோடு பகிர்ந்து கொள்வோம். ஏழைகளை ஒரு நாளாவது சிரிக்கவைத்து இறைவனை மகிழ்விப்போம். ''இந்தச் சிறியவரில் ஒருவனுக்கு எதைச் செய்தீர்களோ அதனை எனக்கே செய்தீர்கள் என்றார் இயேசு பிரான் ஆடம்பரச் செலவுகளை அறவே ஒழித்து மற்றவர்களை மகிழ்வூட்டுவோம் இதுவே தெய்வீகபாலனுக்கு நாம் கொடுக்கும் பரிசாகும். இறையரசி உங்களோடு தங்குவதாக!''

வண. கலாநிதி எஸ். ஜெபநேசன்
பேராயர், தென்னிந்தியத் திருச்சபை.

## சமாதானமும் நல்லுறவும் நிலவ பாலன் கிறிஸ்து அருள் புரிவாராக!

கிறிஸ்து பிறப்பின் நிகழ்வு உலக வரலாற்றில் கடவுள் மனிதர் மத்தியில் நிகழ்த்திய பெரும் செயலாகும். மனித வரலாற்றில் கடவுள் பங்கு கொண்டார்.

முதல் நத்தாரின் போது விண்தூதுவர் அளித்த செய்தி ''பூமியிலே சமாதானம் மனிதர்களிடையே நல்லுறவு உண்டாகுக''

இன்று இதற்காக ஏங்கிநிற்கும் மக்கள் கூட்டத்திற்கு கிறிஸ்துவின் பிறப்பின் செய்தி நம்பிக்கையை ஊட்டுகிறது.

மனித வரலாற்றில் பங்கு கொள்ளுகின்ற கடவுள் இன்றும் எமது வரலாற்றில் பங்கு கொள்கிறார். ஏழ்மையின் கோலமாக பிறந்த கிறிஸ்து எமது மக்களின் துயர், துன்ப அனுபவங்களில் பங்கு கொள்கிறார்.

முழு மனித குலத்துக்கும் விடுதலை அளிக்க பிறந்த கிறிஸ்து அடக்கப்படும் ஒடுக்கப்படும் மக்களுக்கு விடுதலையையும், நம்பிக்கையிழந்த மக்களுக்கு நம்பிக்கையின் ஒளியையும் அளிப்பாராக.

நீதியுடன் கூடிய சமாதானமும், நல்லுறவும் எமது நாட்டிலே நிலவ பாலன் கிறிஸ்து அருள் புரிவாராக.

வண. வி. செ. பி. நேசகுமார்.
யாழ். குரு முதல்வர், இலங்கைத் திருச்சபை.


வாடிக்கையாளர்களுக்கு
★ எமது நத்தார் வாழ்த்துக்கள் ★
( பண்டிகைக் கால
மலிவு விற்பனையை
பெற முந்துங்கள்! )
✶ புத்தம் புதிய - புதிய ரகச் சாறி வகைகள்
✶ சிறியோர் முதல் பெரியோர் வரையிலான புதியரக றெடிமேட் ஆடைகள்
✶ சூட்டிங், சேட்டிங் வகைகள்
மற்றும் புடைவை வகை அத்தனையும் விசேடமாகத் தருவிக்கப்பட்டு விற்பனையாகின்றது!
உங்கள் தெரிவுகளுக்கான எமது மையங்கள்:
யோகாமணி ஆடை அகம்
32, சந்தோசம் தெரு,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
யோகா ஆடை அகம்,
10, மேஜர் சோதியா தெரு,
(மின்சார நிலைய வீதி)
யாழ்ப்பாணம்.
குமார் புடைவை மாளிகை,
முத்திரைச் சந்தை,
(கிட்டு பூங்கா முன்பாக)
நல்லூர்.
எமது நிலையங்கள் இரவு 9 மணிவரை திறந்திருக்கும்.
(சி-38)


## ஒளிபரப்பி ஆசியீந்தார்!

கண்ணிருட் கவலைகளைப் புதைத்துக்கொண்டு
பதறியே கதறுகின்ற அபலைகளின்
எண்ணத்துள் துளிர்க்கின்ற ஆசைகளை
ஏற்றவர்க்கு வழங்குகின்ற அருளைத்தாங்கி
மண்ணூடு ஏக்கத்தின் விளிம்பினிலே
மனமுடையும் மக்களுக்கும் மருத்துவனாய்
தண்ணளியின் வளங்களையே பகிர்ந்தளிக்க
மன்னவனாம் யேசுபரன் அவதரித்தார்.

✶ ✶ ✶

உருக்குலைந்து நடுங்குகின்ற உருவத்தோடு
உடலுறுதி தளலந்திடினும் சுமைகள் தாங்கி
தெருவூடு தடுமாறித் தத்தளித்து
குமைகின்ற உள்ளத்து மாந்தருக்கு
அருவுருவாய் அனைவரையும் காத்து நிற்கும்
ஆதியந்த மற்றவிறை மனிதனாகி
அருள்வழங்க ஆவினூறை விடத்தில் தோன்றி
அவனியெலாம் ஒளிபரப்பி ஆசியீந்தார்.

— ''மாசிசன்பிள்ளை''

## புண்ணியனே துயர் போக்கிடுவாய்!

ஆநிரைதுயில் குடிலில் ஆதவன் உதயம்,
மாதாசி மரியாளின் மடியினிலே மாபரன்,
பூமியிலே நன்மனதோர் சாந்தி அடைவரென,
வானத்து தூதர் வாழ்த்துக்கள் பாடினரே.

மண்ணில் வந்தபெரும் சுடரே ஒளிவிளக்கே
கண்ணில் மணியென காத்திடுவாய் எம்மை
எண்ணிலா துன்பம் எடுத்துரைக்க யாருமில்லை
புண்ணியனே நீக்குவாய்! துயரெல்லாம் போக்குவாய்!

— கவிதா ஜெயப்பிரகாசம்

## யேசு பிறந்ததால் வாழ்வு மலர்ந்தது

விண்ணில் இருந்தொரு வண்ணம் ஒளிர்ந்தது
அன்னை மேரியின் அகப்பை கனத்தது
எண்ணம் மக்களின் இதயம் திறந்தது
மண்ணில் மானுட வாழ்வு மலர்ந்தது
தூய வளவன் துணையில் தாயவள்
நேய முடனருட் தாதனைச் சுமந்தனன்
ஆயர் குலத்தினர் தொழுவம் அதனிலே
நாயக னாய்த்திரு யேசு பிறந்தனன்
அல்லல் பட்டவர் ஆற்றா துழன்றவர்
சொல்லற் கரிய துன்பம் சுமந்தவர்
தொல்லை வல்வினைத் துயரில் துடித்தவர்
எல்லை இலாத இன்பம் அடைந்தனர்
இன்பச் சுரப்பியாய் ஏழைச் கிரங்கினார்
துன்பம் சுமந்திடச் சிலுவை அறைந்தனர்
அன்பின் பெருக்கினால் உயிர்த்து எழும்பினார்
முன்பின் உலகினர் முந்தித் துதித்தனர்
உயிர்ப்பு எத்துணை ஆற்றல் உடையது!
உயிர்கட் குறுதுணை யாக நிலைப்பது!
உயர்ச்சிக் காகவே உழைப்பவர் மரிக்கினும்
அயற்சி யற்றவர் உயிர்ப்பு மலர்த்துமே!
எங்கு உலகினில் அடக்கல் ஒடுக்கல்
தங்கி மக்களைத் தவிக்கச் செய்யுமோ
அங்கு இறையொளி மனித வடிவமாய்
வந்து மக்களை வாழ வைக்குமே!

நயினைக் கவிஞர்
நா. க. சண்முகநாதபிள்ளை

## அமைதிகாண அருள்புரிவீர்!

ஆய்க்குடிலில் அவதரித்த
அன்புருவே அருட்சுடரே!
அன்னைமேரி ஈன்ற சுதனே!
அல்லலுற்றோர் வாழ்வினிலே
அமைதிகாண அருள்புரிவீர்
அகிலமெலாம் போற்றும் அரசே!

✶ ✶ ✶

காய்ந்துலர்ந்து வாடியே உம்
கருணைமழைக் கேங்குமுள்ளம்
அருண்மழையில் அலர்ந்திடுமே!
கர்த்தரே எம் ரட்சகரே!
கமலமலர்ப் பொற்பதமே
பற்றினோம் பிரேம குருவே!

— அலர்மகள்


கிறிஸ்து பிறப்பு நன்னாளில்
அனைவரும்
இன்புற்றிருக்க வாழ்த்துகிறோம்
வானொலி மனுவல்
றேடியோ, ரி. வி. டெக் பழுது பார்ப்பதில் முன்னோடிகள்
121, ஸ்ரான்லி (அர்ச்சுனா) வீதி,
யாழ்ப்பாணம்.
[சி/39]



எமது வாடிக்கையாளர்கள்
— அனைவருக்கும் —
நத்தார் நல் வாழ்த்துக்கள்
ராஜா ஸ்ரோர்ஸ்
67, 69 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-40]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்கு ஓர் நற்செய்தி

பாலர் முதல் பல்கலை மாணவர் வரை உங்களுக்குத் தேவையான

* பாடப்பயிற்சிப் புத்தகங்கள்
* பாடசாலை உபகரணங்கள்

அனைத்தும் நிதான விலையில் பெற்றுக்கொள்ள

புதியதோர் ஆரம்பம்

**யாழ்ப்பாண பொத்தக நிலையம்**

448, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/9948)



## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**A/L 94** ஆம் ஆண்டு பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புக்கள்

**ஆரம்பம்: 01 - 01 - 1995 (ஞாயிறு)**

வர்த்தகம் — பிரபல ஆசிரியர்
இந்து நாகரீகம், இந்து சமயம் — திரு சோதி
புவியியல் — திரு. வேலா

[சி-26]



உங்களுக்கு!
சவுக்கம் கன்றுகள்
தேவையா?

★ மிகக் குறைந்த விலையில் உற்பத்தி செலவுடனேயே வழங்கப்படுகின்றது.
★ பொலித்தீன் பைக்கற்றுகளில் நன்கு பராமரிக்கப்பட்ட சவுக்கம் கன்றுகள் ஐந்து ரூபா மட்டுமே.

உங்கள் தேவைக்கு:

சூழல் பாதுகாப்பு நிறுவனம்,
மணல்காடு,
தமிழீழம்.

அல்லது

சூழல் பாதுகாப்புப் பகுதி,
த.பொ.மே. நிறுவனம்,
தாவடி,
தமிழீழம்.

'மலரும் புதிய ஆண்டிலும் மரநடுகையை தொடருவோம்'

[சி-10090]



நத்தார் புது வருடத்தை முன்னிட்டு

**05-12-94** தொடக்கம் **31-12-94** வரை

## மலிவு விற்பனை

சகல விதமான புடைவைகளுக்கும்

**விசேட கழிவுண்டு**

வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்

**லைடன்** புடைவை நிலையம் (திவகம்)

249, இராசன் வீதி (மின்சார நிலைய வீதி), யாழ்ப்பாணம்.

(சி-9926)


## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 — 12 — 1919

சிவபதம்: 28 — 12 — 1991

திருமதி
**பொன்னுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை**
(விழிசிட்டி, வித்தகபுரம் தெல்லிப்பழை)

திதி: 25 — 12 — 1994

நீங்கா நினைவுடன் நினைவு கூர்ந்து உங்கள் ஆத்மா சாந்தியடைய இறையருள் வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணவன், மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
உறவினர்கள்.

தற்பொழுது வதிவிடம்,
C/o Dr. சி. சதாசிவம் (மகன்),
சித்தங்கேணி.

(34163)

# எங்கள் உள்ளத்தில் எழும் விசுவாச ஒளியில்

# சமாதானப் பிரபுவாம் யேசுவைக் காண்போம்

**அன்பே** அருள் வடித்துச் சுடர்விடும் சமாதானத்தின் பிரபுவாகிய, திருமகனாகிய யேசுவை கண்ணாற் காண வாய்ப்பு பெறாத நாம், உள்ளத்தில் எழும் விசுவாச ஒளியில் அவரைக் கண்டு மகிழ்வோம். நாம் பெற்ற இன்பத்தை மற்றவருடன் பகிர்ந்து வாழ்வோம்.

சமாதான விழா அளிக்கும் நற்செய்தி என்ன? உலகில் நல் மனத்தோர்க்கு சமாதானம். இது ஆழ்ந்த பொருளுடைய சிந்தனையைத் தூண்டுவதாகிய, சக்தி நிறைந்த, பயனுடைய வாக்கியம் உலகில் அமைதியும், மகிழ்ச்சியும், இன்பமும் தரும்பொருள்கள் கோடிக்கணக்கில் இருந்தும், "நன்மனத்தோர்க்கு மகிழ்ச்சி" என்ற ஒரே வார்த்தையில் சகலத்தையும் அடக்கிவிட்ட சிறு வாக்கியம்.

இறை வார்த்தையானவர், மனித உடல் எடுத்த வேளையில், இறைவன், இவ்வுலகை அன்புடன் தொடுகின்றார். அவர் கைப்பட்டதால் மனிதனும் உலகமும் புனிதமாகின்றன. கிறிஸ்துவில் பிறப்பால் கிறிஸ்துவின் மனிதனும், உலகமும் ஒன்று பட்டு, இறைவனுக்கே உரிய இறைவனது 'பூசைனைக்குரிய தூயமலர்களாக'' மாறுகின்றன.

விண்ணையும் மண்ணையும் அவர் வழியாக தம்மோடு ஒப்புரவாக்கினார். "தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்"; "எளிய மனத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களதே", என்பதற்கு ஏற்ப ஒளியான தூய உள்ளம் படைத்த விண்ண

வரும் எளிமையே சின்னமாகக் கொண்ட இடையரும் போற்றிப்புகழும் இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பது தூய்மையும் எளிமையுமாகும்.

இதில்தான் நத்தாரின் மகிமையும், ஈசன் ஈந்த ஈடில்லா மகிழ்ச்சியும், யேசு தந்த ஆனந்தமும், எளிமையும், தூய்மையும் இணைந்து பிணைந்தும் அகமும் புறமும் ஒன்று சேரும் பொழுதுதான் அவரின் திருவுள்ளம் அவனியில் நிறைவுறும்.

விண்ணொளி ஞானப் பெருக்கே! மண்ணொளியாய் வந்தெங்கள், ஞானத்தின் நன்னெறியைக் கண்ணொளியாய்க் காட்ட வருக!

"இறைவா! எங்கு மன வருத்தமுள்ளதோ அங்கு மன்னிப்பையும் எங்கு ஐயமுள்ளதோ அங்கு நம்பிக்கையையும் எங்கு இருள் உள்ளதோ அங்கு ஒளியையும் எங்கு துன்பம் உள்ளதோ அங்கு இன்பத்தையும்"

(புனித பி. அசிசி)

நம் மண்ணில் பரப்ப எமக்கு அருள்தாரும்.

**நத்தாரின் செயற்பாடு**

இருளில் இருந்து ஒளிக்கும், சாவிலிருந்து வாழ்வுக்கும்

2000ஆம் ஆண்டுகளுக்கு முன்பும் 'இங்கு இடமில்லை' யென்ற குரல் பெத்தலெகெம் ஊரிலே பல இல்லங்



களிலும் உள்ளங்களிலும் ஒலமிட்டன. இன்றும் அது தொடருகிறது. இறைவனுக்கு தன் உள்ளத்தில் இடமளியாதவன் எப்படி தன் சகோதரனுக்கு தன் இல்லத்தில் இடமளிப்பான்? இவ்வேளையில் அறிஞர் தோமஸ் ஸ்பெயினின் கூற்று சிந்தனைக்குரியது. "உலகமே என் இல்

இருள் அடைந்திருக்கிறது. "அவ்வொளி இருளில் ஒளிர்ந்தது" [அரு 1:5] என்றபடி இருண்ட சூழ்நிலை அகன்று ஒளி உதயமாக தன்னலமற்ற பணியும் கடின உழைப்பும் வளங்களை பகிரும் உள்ளங்களுமே மூலவேராக தேவைப்படுகின்றன.

உயிர் துறந்தார் மனுமகன்; உதயமாகினார் இறைமகன். மறைந்தது போல தென்பட்டது, மறைவித்து, மடிந்தது நூறாகத் துளிர்ந்தது. துளிர்த்தது மலர்ந்தது; மலர்ந்தது பழுத்தது; பேரொளிக் கதிர்

கள் அகிலம் முழுவதும் பரவியது. கிறிஸ்துவின் விழுமியங்களைப் கடைப்பிடிப்போன் கிறிஸ்து அவன் ஆகின்றான். சமாதானம் நம்மண்ணில் நிரந்தரமாக நிலைகொள்ளப் பணிபுரிவோம். இதனாலன்றோ வானோர் படைத்திரளுடன் நாமும் இணைந்து பாடத்தகுதியாவோம்.

உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக. உலகிலே அவர் தயவு பெற்றவர்களுக்கு அமைதி ஆகுக"!

★

**துரை ஆரோக்கியதாசன் (பி. ஏ)**
(Dip-in-Ed.)

கடந்து செல்லும் யாத்திரையே மானிட வரலாறு. இந்தப் பயணத்திலே பங்கு பற்றும் பயணிகளை இன்று பற்றி நிற்கும் பொய்மை இருள்–சாவுகளின் நிலைப்பாடுபற்றிய சிந்தனைகளின் பரிமாற்றத்திற்குரிய தளமே, நத்தார் விழாவின் செயற்பாடாகும்.

லம், மனித சமுதாயமே என் தோழன், பிறருக்கு நன்மை செய்வதே என் சமயம், என் உள்ளமே என் கோயில்" என்று தன்னையே பகிர்ந்தார்.

இன்று நம் நாட்டில் நிலவும் அமைதியின்மை சமாதானத்திற்கு ஒரு மறைமுகமான, ஆனால் மெய்யான ஓர் அச்சுறுத்தலாக இருக்கிறது. மனித நேயத்திற்கு குந்தகமான செயல்கள் அனைத்தும் சமாதானம் மலர ஊறுவிளைவிக்கின்றன.

"வாழ்வுக்கு ஒரு மதிப்பு இருக்கின்றது. பொருள் உள்ளது வாழ்வின் துன்பம் எதுவும் வீணாவது அல்ல, வாழ்வில் சிந்தும் ஒவ்வொரு துளிக் கண்ணீரும், ஒவ்வொரு சொட்டு இரத்தமும் மதிப்புள்ளது" என சிந்தனையாளர் பி. மோரியாக் எம் இன்றையவாழ்விற்கு அழுத்த மளிக்கிறார். நம் மண்ணில் சுயநலத்தால் பேராசையால்

## மனுமகன் பிறப்பு....

( 3 ஆம் பக்கத் தொடர்ச்சி )

தகவல் முதல் கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை 1842இல் லண்டனில் ஒரு பதினாறு வயதுச் சிறுவனால் தயாரிக்கப்பட்டதாகவும் கூறுகிறார்கள்.

★ கிறிஸ்மஸ் நாளில் பரிசு கொடுக்கும் நடைமுறை. இயேசு பிறந்த போது அவரைப் பார்க்கச் சென்ற மூன்று ஞானிகள் தூபம், பொன், வெள்ளைப் போளம் என்பவற்றை பரிசாக கொடுத்தனர் அல்லவா? அதிலிருந்து தான் தொடங்கியது.

★ 'போயின் செற்றியா' மலரை, 'கிறிஸ்மஸ் மலர்' என்று கூறுகிறார்கள். நத்தார் தின இரவு ஒன்றில் சிறு குழந்தை ஒன்று அழுது கொண்டிருந்தது. பாலக இயேசுவுக்கு பரிசு கொடுக்கவேண்டும் என்பதே அதன் ஆவல், அப்பொழுது திடீரென தோன்றிய உருவம் ஒன்று, கொடுக்கும் பொருளை விட மனதிலுள்ள அன்பு தான் பெரிதெனக் கூறி, பக்கத்திலிருக்கும், புதரிலிருந்த இலைகள் சிலவற்றை பறித்தெடுத்துச் செல்லக் கூறியது. குழந்தையும் அவ்வாறே செய்தது இயேசுவின் அருகே சென்றதும் பச்சை இலைகள் 'சிவப்பு மலராக' மாறியதாம் அன்றிலிருந்து தான் 'போயின் செற்றியா' கிறிஸ்மஸ் மலர் என அழைக்கப்படுகிறது.

தொகுப்பு:
— கி. செல்மர் எமில்


## இலவச ஆங்கில வகுப்பு

இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் மீசாலை கிழக்கு அலகினால் 1995 க. பொ. த. சா/த மாணவர்களுக்கான இலவச ஆங்கில வகுப்பு தமிழர் திருநாளாம் தைப்பொங்கலுடன் ஆரம்பமாக இருப்பதால் கற்க விரும்பும் மாணவர்கள் 06-01-95ற்கு முதல் தங்கள் விண்ணப்பப்படிவங்களை எமது அலகு நிர்வாக சபை உறுப்பினர்களின் சிபார்சுடன் விண்ணப்பிக்குமாறு வேண்டுகின்றோம். மேலும் விவரங்கள் எமது பணிமனையில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

— கௌரவ செயலாளர்

இ. செ. சங்கம்,
மீசாலை கிழக்கு அலகு,
மில் வீதி, மீசாலை.

(சி-46)



தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

## மீள் பதிவுக்கான அறிவித்தல்

* யாழ். மாவட்டத்தில் இயங்கும் சகல தனியார் கல்வி நிறுவனங்கள் / பிரத்தியேக வகுப்புகள்/9 பேருக்கு குறைந்த மாணவர்களைக் கொண்ட வகுப்புகள் அனைத்தும் தங்களது பதிவுகளைப் புதுப்பித்தல் வேண்டும்.
* மீள் பதிவுகள் மேற்கொள்ளப்படும் காலம்

| | | |
|---|---|---|
| 26 — 12 — 94 | திங்கள் | 9-00—12-00 மணிவரை |
| 28 — 12 — 94 | புதன் | 9-00— 2-30 மணிவரை |
| 30 12 — 94 | வெள்ளி | 9-00—12-00 மணிவரை |

* மீள்பதிவுகள் பின்வரும் அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும்.

யாழ். கோட்டம், மருதனார்மடம் கோட்டம் பண்டத்தரிப்புக் கோட்டம்
யாழ். மாவட்ட ஒன்றிய அலுவலகம்,
19, செம்மணி வீதி,
யாழ்ப்பாணம்.

வடமராட்சிக் கோட்டம்
சதா பொன்ஸ்,
மாலு சந்தி.

தென்மராட்சிக் கோட்டம்
சஷாந்தீஸ்,
23, டச்சு வீதி,
சாவகச்சேரி.

★ மீள் பதிவுக்கு கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை.
★ மீள் பதிவு செய்யாத கல்வி நிறுவனங்கள்/பிரத்தியேக வகுப்புகள் 31-12-94இற்கு பின்னர் இயங்க அனுமதிக்கப்படமாட்டா.

தலைவர்,
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.

(சி-36)


## புலிகளின் குரல் வானொலியில்

**25 — 12 — 1994**
**ஞாயிறு இரவு**

★ 8-01 — இசையரங்கம் — திரு. இராசப்பிரியனின் வயலின் வாத்தியக் கச்சேரி
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தொடர் நாடகம் — பொன். கணேசமூர்த்தி எழுதும் இலங்கை மண் 52ஆம் அங்கம்
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**26 — 12 — 1994**
**திங்கள் காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7 40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## ஆஸ்பத்திரிக்கு 50 ஒட்சிசன் சிலிண்டர்கள்

யாழ்ப்பாணம், டிச. 25

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு "ஹபரண" கப்பலில் 50 ஒட்சிசன் சிலிண்டர்கள் வந்து சேர்ந்துள்ளன. இவை வைத்தியசாலையின் பாவனைக்குப் போதாது என்றும் இதனால் ஒட்சிசன் சிலிண்டர்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அறிகுறி தோன்றியிருப்பதாகவும் வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-17)


## நன்றிகள்

தென்மராட்சி க. பொ. த. சா/த உயர்தர மாணவர்களின் சிறந்த பெறுபேறுகளை நிலைநாட்ட உதவிய சகல பாடசாலை ஆசிரியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள், மாணவர் கருத்தரங்குகள் நடத்திய இலங்கை செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரிப் பிரிவினருக்கு எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தென்மராட்சி
உயர்தர வகுப்பு மாணவர்கள்
சாவகச்சேரி.

(சி/45)


## கண்ணீர் அஞ்சலி

எமது அன்புத் தோழிகள் கோசலா, கோகிலா ஆகியோரின் அன்புத் தந்தையார்

**திரு. க. கோபாலபிள்ளை**
அவர்களின்

மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை,
(94ஆம் ஆண்டு மாணவிகள்)

(34348)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில்: 02 — 01 — 1904

விண்ணில்: 25 — 11 — 1994

**அமரர் சின்னத்தம்பி வயிரமுத்து**
(மலாயன் பென்சனியர்)

அன்னார் நினைவு நாளாகிய (27-12-94) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணியளவில் அவரது மனையில் நடைபெறும் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மகன்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

திரு. திருமதி. கந்தசாமி,
மாயன் லொச்,
உடையார் வளவு,
அச்செழு.

(8151)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## இயேசு வழியில் இறைபணி!

இன்று கிறிஸ்தோதயத் திருநாள். இறைமகன் இயேசு அவதரித்த நன்னாள்.

இறைவன் மனிதனான நிகழ்ச்சி — "விடுவிக்கும்" நிகழ்ச்சி. "ஏனெனில், தம் மக்களைத் தேடி வந்து விடுவித்தருளினார்" (லூக் 1:68) என்ற வாசகம் நோக்கற்பாலது.

மீட்பர் இயேசு ஒடுக்கப்பட்டவர்களுக்கும், அடக்கப்பட்டவர்களுக்கும் விடுதலை தேடிக் கொடுத்தார்; உரிமைகளை இழந்திருந்தவர்களுக்கு சுதந்திர வாழ்வைத் தேடிக் கொடுத்தார்; அவர்களின் வாழ்வை செம்மைப்படுத்தினார்; இறைவழிக்கு நெறிப்படுத்தினார்.

தனது பணி — விடுதலைக்கான பணி — விடுவிக்கும் பணி என்பதை அண்ணல் இயேசுவே எடுத்துக் கூறுகின்றார். "எளியோருக்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர் — குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினார்."

(லூக். 4;18-19)

அடிமைத் தளையில் வாழ்ந்த அனைவருக்கும் விடுதலை வாழ்க்கையின் நம்பிக்கையைத் தரும் உயிர்ப்பாக அமைந்தது பாலன் இயேசுவின் பிறப்பு.

தெய்வத்தின் மறுவடிவமே தேவகுமாரன் இயேசு என்று சொல்கிறோம். அவர் ஒரு புரட்சிவழியாக— விடுதலை வீரராகத் திகழ்ந்தார்; மனித நல்வாழ்வுக்காகவும், விடுதலைக்காகவும் தன்னையே அர்ப்பணித்த தியாகியாக மிளிர்ந்தார்; மக்கள் தொண்டனாக வாழ்ந்து இன்னலுற்ற மக்களுக்கு வாழ்வையும் — விடுதலையையும் தேடித் தந்தார்.

உலகுக்கு உதாரண புருசராகத் திகழ்ந்த அந்த உத்தமரின் வாழ்க்கை, இன்றைய உலகுக்கு ஒரு நல்வழி காட்டும் நெறியாக அமைந்து விட்டது.

இயேசு மக்கள் தொண்டனாக வாழ்ந்தார்; தன் சீடர்களின் பாதங்களைக் கூடக் கழுவினார்; மக்கள் மேம்பாட்டுக்காக தம்மையே தியாகம் செய்தார்; சிலுவை சுமந்து, இரத்தம் சிந்தினார்.

இந்தத் தியாகம் இன்று ஈழத் தமிழருக்கு வழிகாட்டுகின்றது.

வெறும் மிரட்டல்களுக்கு— அச்சமூட்டும் நெருக்கடிகளுக்கு— கொடுமைகளுக்கு— அஞ்சி தான் கொண்ட கொள்கையை கைவிட்டவரல்லர் இயேசு.

இத்தகைய கொள்கைப் பிடிப்பும் தியாகமும்தான் எமது விடுதலைப் பயணத்துக்கு இன்றியமையாதவை.

இதற்கு அப்பால்—

இன்னலுற்ற மக்களின்பால் அவர்காட்டிய கருணை, பரிவு, அன்பு என்பன இன்று எமக்கு அவசியம் வேண்டற்பாலன.

யுத்தக் கொடூரத்தால் நலிவுற்றிருக்கும் எமது தமிழ்ச் சகோதரர்களின்பால்— தேவகுமாரன் காட்டிய வழியில் — இரக்கம் காட்டி அவர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டியது நமக்கு காலம் விதித்த கடமையாகும்.

வரலாற்றில் தோன்றிய அரசுகளில் பெரிதாக விளங்கிய ரோமப் பேரரசினர் தமது ஆளுகையை "ரோம சமாதானம்" என்று வர்ணித்தார்கள்.

ஆனால் அந்த அரசிற்குள் வாழ்ந்தவர்கள் அடக்கப்பட்டு, சுயாதீனமற்று அடிமை நிலையிலேயே வாழ்ந்தார்கள்.

அதே நிலமையிலேயே தமிழர்களாகிய நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் விடுதலை கேட்டதால் இன்னல்களை அனுபவிக்கிறோம். போர் நிலை நீடிக்கிறது.

எனினும் சமாதானத்தை, அமைதியை நாம் வெறுக்கவில்லை. அவை கிடைக்க வேண்டும் என்று பேரவாக் கொண்டுள்ளோம்.

அதனால் —

கொழும்பு அதிமேற்றிராணியார் அதி வண. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ கூறுவது போல, அமைதிக்கும் சமாதானத்துக்குமாக இன்றைய நாளில் பிரார்த்திப்போமாக.

---

அரசியல்

இளையகாந்தி — உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# இறைமை, கௌரவம் என்ற திரையின் பின்னால் சந்திரிகா இராணுவத்தின் பக்கம் சாய்கிறாரா?

இன்று நத்தார் தினம். யேசுபிரான் அவதரித்த இந்தப் புனித நாளன்று வடக்கு-கிழக்கில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் தவிர்ப்பு ஒன்று உருவாகும் என்று பலமாக எதிர்பார்க்கப்பட்டது. அதற்கான பேச்சு வார்த்தைகள் நத்தாருக்கு முன்னர் நடைபெற்று, இணக்கம் காணப்படும் என்று நம்பப்பட்டது. ஆனால் மக்களின் நம்பிக்கை, எதிர்பார்ப்பு எதுவுமே நிறைவேறவில்லை!

## இரண்டாம் கட்டப் பேச்சு இழுபடுவது சகுனப் பிழையா?

ஒக்டோபர் 13, 14 ஆம் திகதிகளில் நடைபெற்ற முதலாவது கட்டப் பேச்சுவார்த்தையின் பின்னர் பத்து நாள் இடைவெளியில் இரண்டாவது கட்டப் பேச்சு நடைபெற இருந்தது. அந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் அரசாங்கத் தூதுக்குழு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படுவதற்கு சுமார் ஆறு மணித்தியாலங்களுக்கு முன்னர், பாலத்துறையில் பெரும் குண்டுவெடிப்பு ஒன்று இடம் பெற்றது. அந்தக் குண்டு வெடிப்பில் எதிர்க்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸாநாயக்கா உட்பட பலர் கொலையுண்டனர். அதனை காரணமாகக் கொண்டு அந்தப் பேச்சுவார்த்தை நடைபெறமுடியாமற் போயிற்று!

எனினும், ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு இரண்டாம் கட்டப் பேச்சு நடைபெறும் என்றே அவதானிகள் நம்பினர். யுத்தத்தை நிறுத்த வேண்டும்; இனப்பிரச்சினைக்குப் பேச்சு மூலம் அரசியல் தீர்வு காணவேண்டும் என்று பொதுத்தேர்தலில் வழங்கிய ஆணையை, ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் மேலும் ஊர்ஜிதப்படுத்தினர்; உறுதிப்படுத்தினர்; இடித்துரைத்தனர். அதனால் சமாதான முயற்சிகள் வேகம் அடையும் என்று பலரும் கருதினர்.

திருமதி சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் விடுதலைப் புலிகளுடனான பேச்சு வார்த்தை தொடரும் என்று அறிவித்தார். எனினும் பல நாள்கள், அதற்கான செயற்பாடு எதுவும் இன்றிக் கழிந்தன. மக்கள் எதிர்பார்த்த வேகம் காணப்படவில்லை. அரசாங்கம் ஆற அமரச் செயற்படும் போக்கே தென்பட்டது வேகமாக ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகளில் தொய்வு ஒன்று உருவாகுவது போன்ற உணர்வு மக்களுக்கு உண்டாகியது.

### இழுபடும் இரண்டாம் கட்டப் பேச்சு

இந்த வேளையில்தான் நத்தாருக்கு முன்னர் இரண்டாம் கட்டப் பேச்சு நடைபெறும் என்று அரச தரப்பில் இருந்து அறிவிப்பு வந்தது. அது தொடர்பாக அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் கடிதத் தொடர்புகளும் இடம் பெற்றன.

ஆனால் காரியம் கைகூடவில்லை. இரண்டாம் சுற்றுப் பேச்சு நடப்பதற்கு சகுனப் பிழை ஏதாவது உண்டோ என்று கருதுமளவுக்கு, அது இழுபட்டுப் போகிறது. இரண்டாம் கட்டப் பேச்சுக்கே இந்த நிலையானால், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதும் இதே மாதிரி இழுபடலாம் என்ற எண்ணம் எழுவது இயல்பே.

அரசாங்கம் உத்தேசித்தவாறு நத்தாருக்கு முன்னர்— 21, 22 ஆம் திகதிகளில் — இரண்டாவது கட்டப் பேச்சு நடைபெறாது போனதற்குக் காரணம் என்ன?

மூன்று நாள்கள் கடந்தும் அரசாங்கம் தனது பக்கத்துக் காரணங்களை நேற்று வரை வெளியிடவில்லை.

பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தியாவது தெரிவிக்க விரும்பவில்லை.

ஆனால் விடுதலைப் புலிகள் தரப்புத் தனது நிலைப்பாட்டை மிகத் தெளிவாக வெளிப்படுத்திவிட்டது.

தமிழ் மக்களுக்கு அன்றாடப் பிரச்சினைகள் பல உள்ளன. அவற்றைத் தீர்ப்பது சம்பந்தமாகவே பேச்சுவார்த்தையின் முதலாவது பகுதியில் ஆராயப்பட வேண்டும். அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு அவர்களது வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்ப வேண்டும். அதன் பின்னரே அடிப்படைப் பிரச்சினையான அரசியல் விவகாரம் பேச்சுவார்த்தையின் இரண்டாவது பகுதியாக ஆராயப்பட்டுத் தீர்க்கப்பட வேண்டும் என்பது விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு.

**அரசின் முந்திய நிலை**

ஒக்ரோபரில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற முதற் கட்டப் பேச்சின் போது இது விடயம் ஆராயப்பட்டது. அரசாங்கத் தரப்புப் பிரதிநிதிகளும் முதலில் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினை அடுத்தே அரசியல் பிரச்சினை குறித்துப் பேசுவது என்றே இணங்கினர். இது குறித்து யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் விடுக்கப்பட்ட கூட்டறிக்கையிலும் மிகத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை முதலில் தீர்ப்பது குறித்தே பேசுமாறு சந்திரிகா தம்மைப் பணித்ததாக அரசாங்கத் தூதுக் குழுவின் தலைவர் திரு. பாலபட்ட பெண்டியும் அப்போது கூறியிருந்தார்.

ஆனால் இப்போது அரசாங்கம் தனது நிலைப்பாட்டை முற்றாக மாற்றிக் கொண்டு விட்டது. அரசியல் பிரச்சினை குறித்து முதலில் பேசுவது என்று தடம் மாறி ஓட முனைகிறது.

இனப்பிரச்சினை நாற்பது வருட காலத்திற்கு மேற்பட்டது. தமிழர் தரப்பும் சிங்களவர் தரப்பும் எத்தனையோ தடவைகள் பேச்சு நடத்தியும் அதனைத் தீர்க்க முடியவில்லை. வருடம் செல்லச் செல்ல அது மேன்மேலும் சிக்கலாகி வருகிறதே அன்றி சுமுகமான நிலையை எட்டுவது மிகக் கஷ்டமான காரியமாகியுள்ளது.

இத்தகைய ஒரு இடியப்பச் சிக்கலான அரசியல் பிரச்சினையை, குறுகிய காலப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்துவிடலாம் என்று அரசாங்கம் கருதுவது அதன் அரசியல் 'அமெச்சூர்' தனத்தையே காட்டுகிறது. குறிப்பாக ஜனாதிபதி சந்திரிகா அரசியல் 'அமெச்சூர்' என்று எதிர்க்கட்சியினர் கூறுவது சரியான மதிப்பீடு தானோ என்று சந்தேகிக்க வைக்கிறது.

**சந்திரிகா சொன்னவை**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆங்கிலத்தில் வழங்கிய பேட்டி ஒன்று கடந்த வியாழக்கிழமை ரூபவாஹினியில் ஒளிபரப்பானது. அதில் அவர் பின்வரும் அம்சங்களைத் தெரியப்படுத்தினார்.

★ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சு முயற்சிகளை அரசு கைவிடவில்லை.

★ மோதல் தவிர்ப்பு அதன் பின்னர் போர் நிறுத்தம், என்பனவற்றைக் கொண்டு வந்து பேச்சுவார்த்தை தொடரப்படும்.

★ பேச்சுவார்த்தையின் போது, அரசாங்கத்தின் தீர்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும். (பேச்சுவார்த்தை மேசையில் போடப்படும்).

★ மோதல் தவிர்ப்புச் சம்பந்தமான படிமுறைகளை (Modalities) வகுப்பதில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

இவற்றுக்கும் மேலாக இரண்டு முக்கிய விடயங்களையும் அவர் தமது பேட்டியின் போது வெளியிட்டார்.

ஒரு வருட காலத்திற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியும் என்பது ஒன்று.

போர் ஒன்று நடந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில், சமாதானம் — தீர்வு — எட்டப்படுவதற்கு முன்னர், எந்த நிலையையும் எந்தச் சந்தர்ப்பத்தையும் (Eventuality) சமாளித்து ... இறைமையைக் காப்பாற்ற சுயமரியாதை ... அரசும் தயாராக இருக்க வேண்டும் — என்பது இரண்டாவதாகும்.

இந்த நிலைப்பாட்டைக் கண்டு, தாம் இராணுவத்தின் பக்கம் சாய்ந்து விட்டதாகக் கூறுவது பொருந்தாது என்பது அவரது வாதமாகவும் இருந்தது.

இனப்பிரச்சினைக்கு ஒரு வருட காலத்தில் தீர்வைக் கண்டு சமாதானத்தை அடைந்து விடலாம் என்று ஜனாதிபதி நம்புவதாக அவரது பேட்டியிலிருந்து தெரிகிறது.

அத்தோடு இனப்பிரச்சினைக்கு அரசாங்கத்தின் தீர்வை பேச்சுவார்த்தை மேசையில் விரைவில் வைக்க வேண்டும் என்ற எண்ணமும் அவரிடம் காணப்படுகிறது.

**அனுபவக் குறைவா?**

ஆனால் பேச்சுவார்த்தைக்கென வகுக்கப்பட்ட, இணங்கப்பட்ட, வழிமுறையை— தடத்தை — மாற்றிக் கொண்டு தீர்வை விரைவில் எட்டலாம்; சமாதானத்தைக் காணலாம் என்று எண்ணுவது அவரது அரசியல் அனுபவக் குறைவாகவே தென்படுகிறது.

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் அன்றாடக் கஷ்டங்கள் இனப்பிரச்சினை விவகாரத்தின் ஓர் முக்கிய அங்கம் என்பதனை எவரும் மறந்துவிட முடியாது. எனவே அவர்களுக்கு வாழ்க்கை இயல்பு நிலையை உண்டாக்கிப் பின்னரே அரசியல் தீர்வு குறித்துச் சிந்திக்க முடியும்.

மக்களின் வாழ்க்கையை நிச்சயமற்ற, வசதியற்ற நிலையில் வைத்துக்கொண்டு அரசியல் தீர்வுக்கு அவசரப்படுவது பொருத்தமானதல்ல.

தமிழர்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலம் அவர்களின் மனங்களை வெல்லலாம் என்று நினைத்துத்தான் சந்திரிகா ஒகஸ்டில் தாமாகவே பொருளாதாரத் தடையைத் தளர்த்தினார்.

ஆனால் இப்போது, ஜனாதிபதிப் பதவியில் எவரும் அசைக்க முடியாத அளவுக்கு ஊன்றி அமர முடிந்து விட்டதால், தமிழர் மனங்களை வெல்ல வேண்டிய தேவைஇல்லை என்று நினைக்கிறாரோ என்னவோ......!

தமிழ் மக்களை வேறாகவும், விடுதலைப் புலிகளை வேறாகவும் பார்த்து மக்களின் அன்றாடப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்ற ஒரு "கோட்பாடு" பிரேமதாசா காலத்தில் நிலவியது. இதே யோசனையை இப்போதும் சிலர் வெளிபடுத்தி வருகிறார்கள்.

**ஆவேசம் அடங்கியது**

அதனைத் தவறான "கோட்பாடு" எனக் கருதித்தான், சந்திரிகா விடுதலைப் புலிகளுடன்நேரடியாகப் பேச முன்வந்தார். விடுதலைப் புலிகள் ஊடாக தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை தீர்த்து அவர்களுக்கு வசதிகளை உண்டாக்கும் முடிவுக்கு வந்திருந்தார்.

அவ்வாறிருக்க—

இப்போது மோதல் தவிர்ப்பு, போர் நிறுத்தம், தீர்வுத் திட்டத்தைச் சமர்ப்பித்தல் என்ற புதிய தடத்தில் மாறி நடக்க முற்படுவது ஏன்?

## தீர்வின் மீதான அவசரம் அரசியல் 'அமெச்சூர்' தனமா?

பிரதமராகஇருந்தபோது— இராணுவம் அரசாங்கத்தை வழி நடத்த முயல்கிறது; தாங்கள் நினைப்பதுபோல நாங்கள் நடக்க வேண்டும் என்று இராணுவ உயர் அதிகாரிகள் எண்ணுகிறார்கள்; அதற்கு நான் இடங்கொடுக்கப் போவதில்லை என்று ஆவேசம் காட்டியவர் சந்திரிகா.

ஆனால் இப்போது, ஆவேசம் அடங்கியவராக இராணுவத்தின் ஆலோசனையை சிரமேற்கொண்டு ஒழுகும், செயற்படும் ஜனாதிபதியாக மாறியிருக்கிறார்!

போர் நீடிக்க வேண்டும்; இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று கிட்டக்கூடாது என்று உள்ளூர நினைத்துச் செயற்படுபவர்கள் இராணுவத்தினர். இதனை சந்திரிகா அறியாமல் இருக்க நியாயம் இல்லை.

அவரது சொல்லும் (எண்ணமும்) செயலும் எதிரும், புதிருமாக இருப்பது பெரிய புதிராகவே உள்ளது!

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் விவகாரத்தில் அவரது ஆரம்பமும், இப்போதைய மாற்றமும் இராணுவத்தை மீறி எதனையும் செய்வதற்கு அவர் தயாரில்லை என்பதனையே வெகு தெளிவாகக் காட்டுகிறது. இதற்குப் பின்னரும் இவருக்கு அரசியல் துணிச்சல் அசாத்தியமானதே.

**எதிர்முனைப் பெறுபேறு!**

தொலைக்காட்சிப் பேட்டியில் —

நீங்கள் இராணுவத்தின் பக்கம் சாய்ந்துவிட்டதாகக் கூறப்படுகிறதே என்று கேட்கப்பட்ட போதுதான் —

தீர்வு ஒன்று எட்டப்படுவதற்கு முன்னர், சமாதானம் உண்டாகுவதற்கு முன்னர், நாட்டின் இறைமையைப் பாதுகாக்கும் விதத்தில், எந்த நிலையையும் சமாளிக்கக் கூடிய தயார் நிலையில் இருப்பதையே சுயகௌரவம் உள்ள எந்த அரசும் விரும்பும் — என்று சந்திரிகா பதில் அளித்திருந்தார்.

நிச்சயமாக, தாம் இராணுவத்தின் பக்கம் சாய்ந்திருக்கிறார் என்பதனை பூடகமாக ஏற்றுக் கொள்ளும் வகையில் இந்தப் பதில் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். நாட்டின் இறைமையைப் பாதுகாப்பது, அரசாங்கத்தின் சுயகௌரவம் ஆகியவற்றுக்குள் ஒளிந்து கொண்டு தமது இராணுவ சார்பு நிலையை ஒப்புக் கொண்டிருக்கிறார்!

**இராணுவம் ஒத்துழைக்குமா?**

தமிழ்ப் பிரதேசங்களை ஆக்கிரமித்தும், தமிழ் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தியும் ருசி கண்ட இராணுவம்— அரசியல் தீர்வு கண்டால் அது தனது பலவீனத்தைப் பிரதிபலிப்பது, அபகீர்த்தியானது என்று கருதும் இராணுவம் —

போரை நடத்தி பணம் சம்பாதித்துக் கொழுத்த இராணுவம் —

இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வுகாணமுயலும் என்று எதிர்பார்ப்பது சுத்த மடத்தனமே!

சந்திரிகா நினைப்பது போல ஒரு வருட காலத்திற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இராணுவம் அனுமதிக்குமா, ஒத்துழைப்புத் தருமா என்பது நிச்சயமாக எதிர்முனைப் பெறுபேறாகவே இருக்கும்!

கடந்த பத்து வருட காலத்தில், அரசாங்கத்துக்குச் சமாந்தரமான ஓர் அமைப்பாக உருவாகிவிட்ட இராணுவம், இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றை எட்டுவதற்குச் சந்திரிகாவுக்கு ஆதரவளிக்கும் என்று எப்படி எதிர்பார்ப்பது?

தமிழ் மக்களுக்குப் போக்குவரத்துப் பாதை ஒன்றைத் திறப்பதற்காக, தான் இருக்கும் இடத்தில் இருந்து நகர மறுக்கும் இராணுவம், தமிழர்கள் தமது சொந்தப் பிரதேசத்தில் சுதந்திரமாக வாழ்வதற்கான ஒரு தீர்வுக்கு முட்டுக்கட்டை போடாது ஆதரவு நல்கும் அல்லது ஊக்கமளிக்கும் என்று நினைத்தும் பார்க்க முடியுமா?

இதனை சந்திரிகா போகப் போகத் தான் உணர்ந்து கொள்வார். அவருக்கு அனுபவம் வளரும் வேளை, இராணுவம் அவரது தோளில் ஏறி விற்றிருக்க முனையலாம்! ★

உதயகாந்தன்

---

## அர்ஜுன்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து கொண்டு கட்சி முன்னேற்றத்துக்காக தாம் தொடர்ந்து செயற்படப் போவதாகச் சொன்னார்.

பெப்ரவரி மாதம் நடைபெறவிருக்கும் —பல மாநிலங்களுக்கான — சட்டசபைத் தேர்தல்களில் தாம் கட்சிக்காகப் பிரசாரம் செய்யப் போவதாகவும் அவர் சொன்னார்.

பல நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும்படி கட்சித் தலைவரை அவர் தமது ராஜினாமாக் கடிதம் மூலம் வலியுறுத்தியிருக்கிறார்.

★ பாதுகாப்பு ஊழல் நடவடிக்கையால் பயனடைந்தோரைக் கண்டுபிடிக்க உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவர் மூலம் விசாரணை நடத்துதல்.

★ அயோத்தி பாபரி மசூதி உடைக்கப்பட்டதற்காக சிறுபான்மை மக்களிடம் கட்சி பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும்.

★ கட்சியின் சகல மட்டங்களிலும் ஜனநாயகத்தையும் ஜனநாயக நடைமுறைகளையும் மீள ஏற்படுத்துதல்

★ பங்குச் சந்தை ஊழலினால் நன்மையடைந்தோரை மறைக்க எடுக்கும முயற்சியைக்கைவிடல்

★ பின்தங்கிய — நலிவுற்ற — மக்களின் மேம்பாட்டுக்கு பூரணமான ஒரு திட்டத்தை முன்வைத்து உடன் செயலாற்ற ஆரம்பித்தல்

★ சமூகவிரோதசக்திகளுக்கு எதிராக கடும் நடவடிக்கைக்கு உத்தரவிடல்

— இவையே அவர் வலியுறுத்திய சில அம்சங்களாகும்.

அர்ஜுன் சிங்கின் இராஜினாமா உடனடியாக ராவின் தலைமைப் பதவிக்கு வீழ்ச்சியைத் தராது எனினும்—

பேப்ரவரியில் நடைபெற இருக்கும் — பல மாநிலங்களுக்கான — தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியின் தோல்விக்கும் அதன் மூலம் ராவின் வீழ்ச்சிக்கும் வழிவகுக்கும் என அவதானிகள் கருத்து வெளியிட்டனர். (உ-ஐ-4)

---

# நத்தார் வாழ்த்து

இறைவன் மனிதனானார் என்பதை ஒவ்வொரு நத்தாரினூடாகவும் நினைவு கூருகிறோம். அன்று அவர் பெத்லகேம் சத்திரத்தில் இடமில்லாதவராய் மாட்டைக் குடிலில் உதயமானார். பாவத்தில் மாளும் மக்களை மீட்க இவ்வுலகிற்கு வந்து ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்து, தெய்வத்தில் தெய்வமாய் திகழ்கின்றார்.

அன்றும் அவர் வந்தபோது உலகம் போர்க்களமாக திகழ்ந்தது. இன்றும் அழிவுகள், சிதைவுகளிலிருந்து ஓரளவு வெளிவந்த எமக்கு சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கை பிறந்தது. ஆனால் அது மிகத் தொலைவில் இருப்பது போலத் தெரிகின்றது.

யாதாயினும் பகைமையை ஒழித்து அன்பை நிலைநாட்டி, உறவுகளை வளர்ப்போமாக. அதுவே இறைவன் மானுட அவதாரமானார் என்ற விந்தையின் மாட்சிமையாகும்.

மெதடிஸ்த சபையின் சார்பிலும், என் சார்பிலும் எல்லோர்க்கும் நத்தார் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

அருட்திரு சி.சா. கருணைராஜ்
முகாமைக் குரு.
மெதடிஸ்த திருச்சபை.

---

விளம்பரம்

## தமிழீழ மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

**திருமதி பாக்கியலட்சுமி சதாசிவம்**
இரத்தினம் அவனியு,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

இல. பணம் 08/93 எதிர்
(ஈடு)

**கந்தையா சிவானந்தன்,**
சிவ அகம், செட்டியார் மடம்,
அராலி வடக்கு, அராலி.
எதிராளி

இவ் வழக்கில் எனக்கு வழங்கப்பட்ட எழுத்தாணையை நிறைவேற்றி எதிராளியிடமிருந்து வழக்காளிக்கு கொடுக்குமதியான ரூபா 180,000/ஐ அறவிடுவதற்காக பின் ஆதனடாப்பில் விவரிக்கப்படும் ஆதனத்தை நான் 1995ஆம் ஆண்டு தை மாதம் 26ஆம் திகதி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன் எனவும், அப்பகிரங்க ஏல விற்பனை குறித்த ஆதனத்திலேயே நடத்தப்படும் என்பதை பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

## குறித்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று சுதுமலை இறை "முக்கியவத்தை" நில பர. 11 இது யாழ்ப்பாணம் காணிப் பதிவகத்தில் ஈ 469/101ல் பதியப்பட்டுள்ளது. இது 6-8-1980ஆம் திகதி நில அளவையாளர் ஜே. எச். ஆர். பேரின்பநாயகம் அளந்து விபரித்த 2240ஆம் இலக்கப் படத்தின்படி நில. பர. 12. இது ஈ 552/88இல் பதியப்பட்டுள்ளது. இதில் நிந்தமாக நிலப்பரப்பு மூன்று குளி, பதின்மூன்று (நில. பர. 3 குளி 13). இது குறித்து படத்தில் 1ஆம் துண்டாகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கு எல்லை கிழக்கு குறித்த படத்தில் 1ஆம் துண்டாகச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கெல்லை கிழக்கு குறித்த படத்தில் 2ஆம் இலக்கத்துண்டு கந்தையா சண்முகநாதனுக்குரியது வடக்கு செல்லையா பெண் பாக்கியத்தினாதனம் மேற்கு சுப்பிரமணியம் கைம்பெண் சரஸ்வதிக்கும் முத்துதம்பி கைம்பெண் இரத்தினத்திற்கும் செல்லையா பாக்கியத்திற்கும் உரிய ஆதனங்கள் தெற்கு சோமசுந்தரம் பெண் தவமணிக்கும் மயில்வாகனம் பெண் புவனேஸ்வரிக்கும் உரிய ஆதனங்கள். இதடங்கலும் குறித்த படத்தில் 3ஆம் துண்டாகச் சுட்டப்பட்ட 10 குளி விசாலங்கொண்ட பாதையில் அரைப் பங்கும் 2ஆம் துண்டுக்குள்ளிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலுரித்தும்,

1994ஆம் ஆண்டு மார்கழி மாதம் 24ஆம் திகதி

பிசுக்கால்,
தமிழீழ மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

வரைவு
செ. ந. விசுவலிங்கம்,
வழக்காளியின் சட்ட அறிஞர். (34349)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா கோபாலபிள்ளை

(இளைப்பாறிய சிரேஷ்ட வரிமதிப்பாளர்)

வேலணை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட வரும் இல. 12, மணல் தறை வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும் முன்னாள் வேலணை மத்திய கல்லூரி ஆசிரியரும், இளைப்பாறிய சிரேஷ்ட வரிமதிப்பாள ரும் ஆகிய கந்தையா கோபாலபிள்ளை அவர்கள் 23-12-1994 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலம் சென்ற கந்தையா தங்கம்மா தம் பதிகளின் கனிஷ்ட புத்திரனும், கலாவல்லியின் அன் புக் கணவரும், குமுதினி (ஆசிரியை வவுனியா கொன் வென்ற்), ரேணுகா (கனடா), மாலினி (2ஆம் வருடம் பௌதிக விஞ்ஞான மாணவி யாழ். பல்கலைக்கழகம்) கோசலா, கோகிலா (வேம்படிமகளிர் கல்லூரி) ஆகி யோரின் அன்புத்தந்தையாரும், சபாநாயகம் (ஆசிரி யர் வவுனியா கொன்வென்ற்), செல்வநிதிநாதன் (கனடா), ஆகியோரின் மாமனாரும், குணராஜியின் (கனடா), அன்புப்பேரனும் காலம் சென்ற கைலாசபிள்ளை அன்னம்மா தம்பதிகளின் மருமகனும் காலம் சென்ற கனகலிங்கம், மற்றும் விஸ்வலிங்கம் (ஜெயபுர றைஸ் ஏஜன்சி கொழும்பு), ஆகியோரின் அன்புச் சகோதரரும், இமயவல்லி, கமலவல்லி, கருணாவதி, ஞானவல்லி, (ஆசிரியர் நாகேஸ்வரி வித்தி யாலயம் சரவணை), சிவகுமாரன், சுசிலாதேவி சகுந்தலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25-12-94) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி. ப. 2 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

தகவல்

திருமதி க. கோபாலபிள்ளை
[மனைவி]

12, மணல்துறை வீதி.
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

(34352)

செல்வன்

## விசுவலிங்கம் அருட்செல்வன்

இணுவில் கிழக்கைச் சேர்ந்த செல்வன் விசுவலிங் கம் அருட்செல்வன் (இணுவில் மத்திய கல்லூரி ஆண்டு 11 மாணவன்) அகால மரணமானார்.

அன்னார் விசுவலிங்கம் விஜயலட்சுமியின் அன்பு மகனும், விஜயகுமாரி, தயாவதி, அருட்குமார், அருட் தாசன், கபில்ராஜ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்லையா, இரத்தினேஸ்வரி, அமரர் சுப்பிரமணியம், அருளம்மா ஆகியோரின் அன்புப் பேரனும், சிறிவிஜ யம், சிறிதரன் (கனடா), கணேசமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும், சிறிரஞ்சினி, சிறிபத் மினி (கனடா), சிவகாமசுந்தரி (கனடா), யோகேஸ்வரி (கனடா), கனகசபாபதி, குணசேகரம் (சுவிஸ்), குண பாலசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புப் பெறாமக னும், தவயோகராசாவின் (M P C. S கிளிநொச்சி), அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1 மணியளவில் இடம்பெற்று பூத வுடல் காரைக்கால் மயானத்திற்கு நல்லடக்கத்திற் காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:

சு. விசுவலிங்கம் (தகப்பன்)

(34357)

## எட்வேட் செல்வசிங்கம்

[மாதகல்]

மாதகலில் இருந்து இடம் பெயர்ந்து மானிப்பா யில் வசித்துவந்த இளைப்பாறிய பொலீஸ் அலுவலர் மேரிஜோசவ் எட்வேட் செல்வசிங்கம் 24-12-94 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற டோமினிக் மேரிஜோசவ் (மண்டைதீவு), விக்ரோறியாப்பிள்ளை அருளம்மா ஆகியோரின் அன்பு மகனும் இளைப்பாறிய ஆசிரியை மில்றெட் மகிழ்மணி (மாதகல்) அவர்களின் அன்புக் கணவரும், திருமதி கிறேஸ்மணி சாமிநாதர் (ஆசிரியை திருகோணமலை), திருமதி ஜெயமணி லூர்து அன் ரனி (இளவாலை), திரு. பிரான்சிஸ் சேவியர் (நக ராட்சி மன்றம் திருகோணமலை) ஆகியோரின் அன் புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 26, கொண்டடி றோட் குருநகர், யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து 26-12-94 பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலியின் பின்னர் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்;

பிரான்சிஸ் சேவியர்
[பாலசிங்கம்]
சகோதரர்

(சி/10097)

# தமிழீழ காவல்துறை
## பதவி வெற்றிடம்

தட்டெழுந்து, சுருக்கெழுத்து – தமிழ்

**தகைமை:**

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து உட்பட 06 பாடங்களில் சித்தி.

**வயது:**

18 தொடக்கம் 30 வரை ஆண்/பெண் இரு பாலாரும்

மேற்படி தகைமையுடைய விண்ணப்பதாரிகள் 28-12-94 காலை 9-00 மணிக்கு பழைய பூங்கா நடுவப் பணியகத்திற்கு சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.

பா. நடேசன்,
பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை.

(சி-10095)

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ–து)
சுன்னாகம்.

## இரண்டு சில்லு உழவு இயந்திர
## தற்காலிக சாரதி பதவி

மேற்படி பதவிக்கு லேசான வாகனம் (கார் போன்ற) செலுத்தும் அனுமதிப்பத்திரம் உள்ளவர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விவரங்களை யும் சங்க வேலை நாட்களில் ரூ. 10/-செலுத்தி தலை மைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: **31-12-94**

–பொதுமுகாமையாளர்.

சுன்னாகம் பல நோ கூ. சங்கம்,
சுன்னாகம்,
24-12-94.

(சி-10094)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

எமது பழைய மாணவரும், எமது முன்னாள் பௌதிகவியலாசிரியருமான

அமரர் க. கோபாலபிள்ளை B.Sc.

அவர்களின் ஆத்மா இறைவனடி சேரவும், அன்னாரின் குடும்பம் மனச் சாந்தியடையவும் இறைவனை வேண்டுகிறோம்.

பழைய மாணவர் சங்கம்
சேர். வை. து. மத்திய மகா வித்தியாலயம்,
வேலணை.

70/20, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(34358)

# கண்ணீர் அஞ்சலி

எமது சகநண்பன் கா. மனோரஞ்சன் (குலாபி) அவர்களின் தாயார்.

திருமதி
காமாட்சிசுந்தரம் கனகம்மா
(ஆசிரியை)

இறைவனடி சேர்ந்தார் அவருக்கு எமது கண் ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

14 ஆம் அணி நண்பர்கள்
மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக் கழகம்.

(34359)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
கா. நடேசராசாவின் அருமைத் தாயார்

திருமதி
கனகம்மா காமாட்சிசுந்தரம்

அவர்களின் பிரிவால் வருந்தும் அவருக்கும் அவ ரது குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங் கள்.

—சித்த மருத்துவ இறுதி வருட மாணவர்கள்

(34354)

## இன்று

அராலி மேற்கு ராஜன் கதிர்காமர் பொதுப்பணி விளையாட்டுக் கழகம், வலி. மேற்கு சங்கானை தெ. ப. வி. கூ. சங்கம் ஆகியவற்றின் ஆதரவில் துணைவி தமிழன் சனசமூக நிலையப் பகுதியில் நடத்திய இலவச திருமணப் பதிவுச்சான்றிதழ் வழங்கல் விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு மேற்படி சனசமூக நிலையத் தில் நடைபெறும்.

வலி. மேற்கு உதவி அர சாங்க அதிபரும் பிரதேச செயலாளருமான திரு. கா. சந் திரராசா தலைமை வகிக்கும் இவ்விழாவில் வலிகாமம் கோட்ட கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. க. பொழிலன், கடற்புலிகள் மகளிர் பிரிவு வலி. கிழக்கு வட்டப் பொறுப்பாளர் செல்வி நன்மலர் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாக வும் யாழ். மாவட்ட பிறப்பு இறப்பு, மேலதிகப் பதிவாளர் திரு. ந. சதாவஜயர் பிரதம விருந்தினராகவு கலந்து கொள்வார்கள்.

கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். (க-161)

★ ★ ★

அபிராமியந்தாதி 51ஆவது செய்யுள் ஆய்வுரை வெளி யீட்டு நிகழ்ச்சி வழக்கம்பரை அம்பாள் கோவிலில் இன்று நண்பகல் இடம்பெறும்.

(ஐ-28)

## மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம், டிச. 25 மக்கள் திலகம் எம். ஜி. ஆரின் 7 ஆவது நினைவு நாள் விழாவை முன்னிட்டு நடை பெறும் நிகழ்ச்சிகளில் இன்று— மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், மூன்று சக்கர வண்டி ஓட்டம் ஆகியன காலை 6 மணிக்கும், கயிறு இழுத்தல் போட்டி பி. ப. 2 மணிக்கும் நடைபெறும். (அ)

## எழுதுவினைஞர்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதிநாள் அடுத்த மாதம் 15 ஆம் திகதி என் றும் —

தட்டெழுத்தாளர், சுருக் கெழுத்தாளர் தரங்களுக்கு விண்ணப்பிப்போர் அடுத்த மாதம் 23 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்றும் அறிவிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை —

அரசாங்கப் பதவிகளுக்கு ஆட்களைச் சேர்க்கும் வயது எல்லையை 40 வயதிலிருந்து 45 ஆக அதிகரிப்பது என பொது நிர்வாக அமைச்சு தீர்மானித்துள்ளது.

(ஐ-4)

## சமாதானம்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் கடமை வாக்களிப் பதுடன் முடிவடைந்து விட வில்லை.

அரசியலில் பங்கு கொண்டு, நாட்டின் முக்கிய தேவை யான சமாதானத்தை ஏற்ப டுத்துவது குறித்து பல்வேறு மட்டத்திலும் உள்ள மக்கள் தாமாக முன்வந்து கருத்துக் களைத் தெரிவித்து ஆர்வத் துடன் செயற்படுவது அவசி யமாகும்.

சமாதானத்துக்கான முயற் சிகள் தோல்வியுற்றாலும் — புதுப் பிரச்சினைகள் தோன் றினாலும் — சமாதானத்துக் கான அர்ப்பணிப்பை நாம் கைவிடக் கூடாது. — இவ் வாறு அதிமேற்றிராணியார் மேலும் தெரிவித்தார்.

(உ-6)

## ஆசிரியருக்கு மாதிரித் தேர்வு

யாழ்ப்பாணம், டிச. 25 கோப்பாய், உடுவில், தெல் லிப்பளை, சண்டிலிப்பாய், சங்கானை கல்விக் கோட்டங் களில் கடமை புரியும் கல்வி அபிவிருத்திக்கழக ஆசிரியர் களுக்கும், தொண்டர் ஆசிரி யர்களுக்கும் நாளை திங்கட் கிழமை மாதிரித்தேர்வு ஒன்று நடத்தப்படவுள்ளது.

கோப்பாய், உடுவில் கோட் டங்களைச் சேர்ந்தவர்களுக்கு இராமநாதன் கல்லூரி யிலும்—

சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளைக் கோட்டங் களைச் சேர்ந்தவர்களுக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி யிலும் காலை 8.30 மணிக்கு தேர்வு நடைபெறும்.

தேர்வினைத் தொடர்ந்து பொது அறிவு, பொது உளச் சார்பு தொடர்பான விரி வுரைகளும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# மரண அறிவித்தல்கள்

## கனகம்மா காமாட்சிசுந்தரம்

(நயினாதீவு)

நயினாதீவு திருமதி கனகம்மா காமாட்சிசுந்தரம் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்கள் 24-12-1994இல் காலமானார்.

இவர் அமரர் வித்துவான் க. காமாட்சிசுந்தரம் (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவி யும், பிரேமலதா (ஆசிரியை, கைதடி முத்துக்குமார சாமி ம. வி), மனோரதி (B A. கனடா), அருட் செல்வன் (B. Sc. Agri-ஜேர்மனி), நடேசராஜன் (சித்தமருத்துவபீடம், யாழ் பல்கலைக்கழகம்), மனோ ரஞ்சன் (யாழ் மருத்துவ பீடம்) ஆகியோரின் பாச மிகு தாயாரும்; Dr. K. T. S. சபாநாதன் (கைதடி), க. சோதிராசா (கனடா), சிவகலாசினி (ஆசிரியை, நாவாந்துறை றோ. க வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும், ராஜீவ், சுகன்னியா, கோபிகாந்த் கோகுலன், ரம்மியா ஆகியோரின் அன்புப் பேர்த்தி யும், நயினாதீவு வர்த்தகர் க. கந்தசாமி, திருமதி கமலாம்பிகை குணரெத்தினம், திருமதி இராசம்மா அப்பாத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-12-94) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-00மணிக்கு கைதடியில் நடைபெறும். உறவினர்களையும், அன்பர்களையும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

தகவல்:

Dr. K. T S சபாநாதன் (மருமகன்),
K. நடேசராஜன்,
K மனோரஞ்சன்.
(மக்கள்)

கைதடி தெற்கு,
கைதடி.

(34342)

## கந்தையா சுப்பிரமணியம் (இரத்தினம்)

(சோதிடர் வேலணை)

வேலணை கிழக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் (அஞ்சலகம் வேலணை) 24-12-94 இல் கோண்டா விலில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பெருமாள் கந்தையா- சின்னத் தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், சிவனேசராசா, புவனேஸ்வரி, நாகம்மா (இரத்த வங்கி, யாழ் போதனா வைத்தியசாலை), யோகராசா (யாழ். போதனா வைத்தியசாலை), தேவராசா, ஆனந்த ராசா (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (25- 12- 94) ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெற்று கோண் டாவில் கிழக்கு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

க. சிவனேசராசா
(சகோதரன்)

'யோகபதி,
329/10, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்

(34356)

## முத்துக்குமாரு கணபதிப்பிள்ளை

ஊர்காவற்றுறை தம்பாட்டியைச் சேர்ந்த முத்துக் குமாரு கணபதிப்பிள்ளை லோட்டஸ் றோட், ஆறு கால் மடம் ஆனைக்கோட்டையில் நேற்றுக் கால மானார்.

அன்னார் மு. பொன்னம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற சவுந்தரி அம்மாவின் கணவரும், வசந்தி (ஜேர்மனி), கனகராசா (பிரான்ஸ்), ஆனந்தராசா (பிரான்ஸ்), குணராசா ஆகியோரின் அன்புத் தந்தை யும், இராசரத்தினத்தின் (ஜேர்மனி) அன்பு மாமனா ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லோட்டஸ் றோட், ஆனைக்கோட்டை இல்லத்தில் இன்று பிற் பகல் 3 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைகள் கோம் பயன்மணல் மயானத்தில் நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:

மு. கந்தஞானி
[சகோதரர்]
தீவக ஒலி – ஒளி உரிமையாளர்

[34360]


# இந்திராவின் ஆபரணம் என்றும் உங்கள் மூலதனம்

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எமது இதயங்கனிந்த

★ நத்தார் புத்தாண்டு நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம் ★

# இந்திரா நகையகம்



உத்தரவாதமுள்ள அசல் 22கரட் தங்க நகைகளை விரும்பிய டிசைன்களில் ஓடர் கொடுத்து பெற்றுக்கொள்ளலாம்.

## இந்திரா நகையகம்

181, லெப்.கேணல் சந்தோசம் வீதி, யாழ்ப்பாணம்.
(கஸ்தூரியார் வீதி,)

வாடிக்கையாளர் கவனத்திற்கு!

உங்கள் தங்க நகைகளை எம்மிடம் விற்க வரும்போது அடையாள அட்டையை அல்லது குடும்ப அட்டையை தவறாது கொண்டுவரவும்.

(சி-51)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25-12-94 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.